தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### <u>பிளவக்கல் அணை பாசனத்திற்கு திறப்பு</u>



விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகாவில் உள்ள பிளவக்கல் அணையை பாசனத்திற்காக வெள்ளிக்கிழமை மாவட்ட ஆட்சித் தலைவர் டி.என்.ஹரிஹரன் தலைமையில் அமைச்சர் கே.டி.ராஜேந்திரபாலாஜி திறந்து வைத்தார். அணையை திறந்து வைத்து அமைச்சர் பேசுகையில் கூறியதாவது: விருதுநகர் மாவட்ட விவசாயிகள் பயன்பெறும் வகையில் தமிழக அரசின் உத்தரவின்படி, பிளவக்கல் மற்றும் கோவிலாறு அணை களிலிருந்து விவசாயத்திற்காக தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. பெரியார் அணையின் முழு நீர் மட்டம் 204.50 மீட்டர். அதன் முழு கொள்ளளவு 192 மில்லியன் கன அடியாகும். கோவிலார் அணையின் முழு நீர் மட்டம் 212 மீட்டர். அதன் முழு கொள்ளளவு 133 மில்லியன் கன அடியாகும். தற்போது பிளவக்கல் அணையில் 174.15 கன அடியும், கோவிலாறு அணையில் 67.98 கன அடி நீரும் உள்ளது. பிளவக்கல் அணைக்கு வினாடிக்கு 20.08 கன அடி நீரும், கோவிலாறு அணைக்கு 0.08 கன அடி நீரும் வந்து கொண்டுள்ளது. பிளவக்கல் அணை மற்றும் கோவிலாறு அணைகளிலிருந்து, இரு அணைகள் சேர்ந்தோ அல்லது தனித்தனியாகவோ நீர் இருப்பைப் பொருத்து வினாடிக்கு 150 கன அடி வீதம் கண்மாய் பாசனத்திற்கும், பிளவக்கல் அணையிலிருந்து வினாடிக்கு 3 கன அடி வீதம் கால்வாய்

பாசனத்திற்கும் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. இதன் பயனாக வத்திராயிருப்பு பகுதியில் உள்ள கான்சாபுரம், கொடிக்குளம் பகுதிகளில் உள்ள பூரிப்பாறைக்குளம், சீவனேரி கண்மாய், குணவந்தனேரி கண்மாய், கொடிக்குளம், பெத்தான்குளம், புங்கன்குளம், வத்திராயிருப்பு பெரியகுளம், விராகசமுத்திரம் கண்மாய் ஆகிய 8 கண்மாய்கள் மூலம் 1167.85 ஹெக்டேர் நிலங்கள் மற்றும் நேரடி கால்வாய் பாசனம் மூலம் 174.69 ஹெக்டேர் நிலங்களும் ஆகமொத்தம் 1342.54 ஹெக்டேர் நிலங்கள் பாசன வசதி பெறும். நீர் இருப்பைக் கருத்தில் கொண்டு விவசாய பெருமக்கள் அதிக மகசூல் பெறும் நோக்கத்துடன் தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் என அமைச்சர் கேட்டுக் கொண்டார். நிகழ்ச்சியில் ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி சட்டப் பேரவை உறுப்பினர் வெ.பொன்னுப் பாண்டியன், மாவட்ட வருவாய் அலுவலர் செ.முனுசாமி, சார் ஆட்சியர் அமர்குஷ்வாஹா, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் மயில்சாமி, தமிழ்நாடு அரசுப் பணியாளர் சங்க மாவட்டத் தலைவர் ஆ.காமராஜ், ஒன்றியக் குழுத் தலைவர்கள் கனகுஅம்மாள், காளிமுத்து உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## கடலோரத் தமிழகத்தில் மழை வாய்ப்பு

தமிழகம், புதுவையின் கடலோரப் பகுதிகளில் வெள்ளிக்கிழமை பலத்த மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது: புதன்கிழமையன்று தென்மேற்கு வங்கக் கடலில் இலங்கையை ஒட்டிய பகுதியில் காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி நிலை கொண்டிருந்தது. இந்த குறைந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி சற்று நகர்ந்து தெற்கு இலங்கைக்கு அருகில் தற்போது நிலை கொண்டுள்ளது. இந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதியின் காரணமாக தமிழகம், புதுவையின் கடலோரப் பகுதிகளில் பலத்த

மழையோ மிக பலத்த மழையோ வெள்ளிக்கிழமை பெய்யும். உள்மாவட்டங்களில் ஆங்காங்கே பலத்த மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

**<u>பி.டி.ஆர். கால்வாயில் தண்ணீர் திறப்பு:விவசாயப் பணிகள் மும்முரம்</u>**

சின்னமனூர் அடுத்த சீலையம்பட்டி பகுதியில், பி.டி.ஆர். கால்வாயில் திறந்துவிடப்பட்ட தண்ணீரைப் பயன்படுத்தி, விவசாயிகள் நெற்பயிர் விவசாயத்தில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். உத்தமபாளையம் வட்டாரத்திலுள்ள ராமசாமி நாயக்கன்பட்டியில் இருந்து, பெரியாறு கால்வாய் மூலம், கடந்த மாதம் விவசாயப் பாசனத்துக்கு பி.டி.ஆர். கால்வாய்க்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதன்மூலம், சின்னமனூர், சீலையம்பட்டி, வேப்பம்பட்டி உள்ளிட்ட 10-க்கும் மேற்பட்ட கிராமங்களில் சுமார் 2,500 ஏக்கர் பரப்பளவில், தற்போது நெற்பயிர் விவசாயம் நடைபெற்று வருகிறது. ஒருபோகம் விவசாயத்தில் தற்போது சம்பா சாகுபடி செய்யப்பட்டுள்ளது. விவசாயிகள் ஆர்வம்: பி.டி.ஆர். கால்வாயில் பாசன விவசாயத்துக்கு தண்ணீர் திறந்துவிட தமிழக அரசு உத்தரவிட்டதை அடுத்து, கடந்த 3 ஆண்டுகளாக மானாவாரி விவசாயம் செய்து வந்த விவசாயிகள், தற்போது நெற்பயிர் விவசாயத்தில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். மேலும், முல்லைப் பெரியாறு அணையில் 142 அடிக்கு தண்ணீர் தேக்கப்பட்டதால், சம்பா சாகுபடிக்கு எவ்வித பாதிப்பும் இருக்காது என, விவசாயிகள் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

**<u>21 விவசாயிகளுக்கு ரூ. 20.50 லட்சத்தில் மானியக் கடன்</u>**

கரூர் மாவட்டத்தில் 21 சிறு, குறு விவசாயிகளுக்கு ரூ. 20.50 லட்சம் மதிப்பில் மானியக் கடனை மாவட்ட ஆட்சியர் ச. ஜெயந்தி வியாழக்கிழமை வழங்கினார். மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்டத்தைச் சேர்ந்த

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் பிரிவைச் சேர்ந்த பொருளாதாரத்தில் பின்தங்கிய அரவக்குறிச்சி வட்டத்தைச் சேர்ந்த 20 சிறு, குறு விவசாயிகளுக்கு விளை நிலத்தில் ஆழ்குழாய் கிணறு அமைக்க தலா ரூ. 1 லட்சமும், ஒரு பயனாளிக்கு ரூ. 50,000 என மொத்தம் ரூ. 20.50 லட்சம் வங்கிக்கடனாக வழங்கப்பட்டது. இதில் 50 சதவீத மானியமாக ரூ. 10.25 லட்சத்திற்கான காசோலை வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் மு. அருணா, வருவாய் கோட்டாட்சியர் கார்த்திகேயன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையின நல அலுவலர் சென்னியப்பன், வட்டாட்சியர் உதயகுமார், கூட்டுறவு வங்கி மேற்பார்வையாளர் கண்ணன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**<u>பண்ணைக் குட்டைகளை விவசாயிகள் பயன்படுத்த வேண்டும்</u>**

பண்ணைக் குட்டைகளை விவசாயிகள் பயன்படுத்தி தனிநபர் வருமானத்தை பெருக்கிக் கொள்ள வேண்டும் என்றார் மாவட்ட ஆட்சியர் எஸ்.சுரேஷ்குமார். கடலூர் மாவட்டத்தில் நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமையின் கீழ் குறிஞ்சிப்பாடி வட்டாரம் அம்பலவாணன்பேட்டை நீர்வடிப் பகுதியில் மழைநீர் சேகரிப்புக்காக தடுப்பணை அமைக்கப்பட்டுள்ளது. அதேபோன்று திம்மராவுத்தான் குப்பம் நீர்வடிப் பகுதியில் கிராமக்குளம், கால்நடைக் குட்டை, அமிழ்வுகுட்டை, தடுப்பணைகளும், கோரணப்பட்டு நீர்வடிப் பகுதியில் கிருஷ்ணங்குப்பத்தில் உட்குட்டையும் அமைக்கப் பட்டுள்ளன. இவைகள் மாவட்டத்தில் அண்மையில் பெய்த மழையின் காரணமாக முழுக் கொள்ளளவை எட்டியுள்ளன. இக்குட்டைகளில் மீன் குஞ்சுகள் வளர்க்கப்படுகின்றன. இதனை ஆட்சியர் பார்வையிட்டார். விருத்தாசலம் வட்டாரத்தில் சாத்தியம் நீர்வடிப் பகுதியில் அமைக்கப் பட்டுள்ள பண்ணைக் குட்டை, எ.சித்தூர் நீர்வடிப் பகுதியில் அமைக்கப் பட்டுள்ள கிராமக்குளம் நீர்வரத்து வாய்க்கால் புனரமைக்கப் பட்டுள்ளதையும் இக்குளத்திலிருந்து விவசாயத்துக்கு மின்மோட்டார் மூலம் நீர் இறைத்து நெல் பயிரிடப்பட்டுள்ளதையும் ஆட்சியர் பார்வையிட்டார்.

பின்னர், கீழ்தொழுதூர் நீர்வடிப் பகுதியில் விவசாயிகளுக்கு மரக்கன்றுகள் மற்றும் இடுபொருள்களை வழங்கினார். மேலும், பயனாளிகளுக்கு மண் துளையிடும் விசைக் கருவி, மண்வெட்டி, தெளிப்பான்கள் போன்ற வேளாண் உபகரணங்களையும் வழங்கினார். அப்போது திட்டப் பயன்கள் குறித்து ஆட்சியர் பேசியது: இந்த ஆண்டில் வடகிழக்கு பருவமழை தொடங்கும் முன்பாக திட்டமிட்டு பணிகள் முடிக்கப்பட்டு விட்டதால் இப் பருவமழையால், குறிஞ்சிப்பாடி, பண்ருட்டி, விருத்தாசலம், நல்லூர் மற்றும் மங்களூர் வட்டார நீர்வடிப் பகுதிகளில் உருவாக்கப்பட்டுள்ள குட்டைகள் நிரம்பியுள்ளன. விஞ்ஞான முறையில் வடிவமைத்து உருவாக்கப்பட்டுள்ள பண்ணைக் குட்டைகள், கிராமக் குட்டைகள், உட்குட்டைகள் மற்றும் தடுப்பணைகளை விவசாயிகள் நல்ல முறையில் பராமரித்து தனி நபர் வருமானத்தை பெருக்கிக் கொள்ள வேண்டும் என்றார். இந்த ஆய்வின்போது வேளாண் இணை இயக்குநர் த.தனசேகரன், துணை இயக்குநர் வி.அருள்பிரகாசம், நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமையின் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பொறியாளர் ஆர்.ஜெயக்குமார், விரிவாக்க அலுவலர் எஸ்.பூங்கோதை மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

## <u>கால்நடைகளுக்கு இன்று மருத்துவ முகாம் தொடக்கம்</u>

தருமபுரி மாவட்டத்தில், கால்நடைகளுக்கு இரண்டு நாள் மருத்துவப் பரிசோதனை முகாம் வெள்ளிக்கிழமை (நவ.28) தொடங்க உள்ளதாக மாவட்ட ஆட்சியர் கே.விவேகானந்தன் தெரிவித்தார். இதுகுறித்து அவர் வியாழக்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு:

தமிழக அரசு வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ள பெண்களின் வாழ் வாதாரத்தை முன்னேற்றுவதற்காக ஒரு பயனாளிக்கு 4 வெள்ளாடுகள், செம்மறி ஆடுகளை வழங்கி வருகிறது இந்தத் திட்டத்தில் தருமபுரி

மாவட்டத்தில் 15,996 பயனாளிகளுக்கு 63,984 ஆடுகள், 450 பயனாளிகளுக்கு 450 கறவை பசுக்களும் இதுவரை வழங்கப்பட்டுள்ளன. இந்த கறவை பசுக்கள், வெள்ளாடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ், வழங்கப்பட்ட கறவை பசுக்களின் பால் உற்பத்தித் திறனைப் பெருக்கவும், ஆடுகளின் எடையை அதிகரிக்கவும் வெள்ளிக்கிழமை, சனிக்கிழமைகளில் (நவ.28, 29) கறவைப் பசுக்களுக்கு இனப் பெருக்க மருத்துவப் பரிசோதனை யும், ஆடுகளுக்கு குடல்புழு நீக்க முகாமும் நடைபெற உள்ளது. இந்த முகாமில், மாவட்டத்திலுள்ள அனைத்து கால்நடை விவசாயிகளும் தங்களது கால்நடைகளுக்கு மருத்துவப் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இன்று கால்நடை இனப்பெருக்க மருத்துவப் பரிசோதனை முகாம்**

நாமக்கல் மாவட்டத்தில் பசுக்கள், வெள்ளாடுகள் மற்றும் செம்மறி ஆடுகளுக்கான இனப்பெருக்க மருத்துவப் பரிசோதனை, குடல்புழு நீக்க முகாம் வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் (நவ. 28 மற்றும் 29) ஆகிய இரண்டு நாட்கள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து ஆட்சியர் வி.தட்சிணாமூர்த்தி வெளியிட்ட செய்திக் குறிப்பு: விலையில்லாக் கறவைப் பசுக்கள், வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டத்தில், நாமக்கல் மாவட்டத்தில் 2011-ஆம் ஆண்டு முதல் இந்த ஆண்டு அக்டோபர் மாதம் வரையில் 8 கிராமங்களைச் சேர்ந்த 400 பயனாளிகளுக்கு 400 கறவைப் பசுக்களும், 220 கிராமங்களில் 12 ஆயிரத்து 751 பயனாளிகளுக்கு 51 ஆயிரத்து 4 ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன. இதுவரையில் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ள ஆடுகள் 64 ஆயிரத்து 152 குட்டிகளை ஈன்றுள்ளது கண்டறியப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கறவைப் பசுக்கள், வெள்ளாடுகள், செம்மறி ஆடுகளின் பால் உற்பத்தித் திறனைப் பெருக்கவும், எடையை அதிகரிக்கவும் தேவையான

இனப்பெருக்க மருத்துவப் பரிசோதனை, குடல்புழு நீக்க முகாம் வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் (நவ. 28 மற்றும் 29)அந்தந்த கிராமங்களில் நடக்கிறது.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

## விவசாயிகள் பண்ணை காடு வளர்க்க ரூ.10 லட்சம்

திருத்தணி : ஒருங்கிணைந்த நீர்வடிவப் பகுதி திட்டத்தின் கீழ், விவசாயிகள் பண்ணை காடுகள் வளர்க்க, 10 லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்க உள்ளது. 11 வகை திட்ட பணிகள் : மாவட்ட நீர்வடிப் பகுதி மேலாண்மை திட்டத்தின் கீழ், 2014 - 15ம் நிதியாண்டில், பண்ணை காடு மற்றும் குட்டை அமைத்தல், ஓடையில் தடுப்பணை கட்டுதல், விவசாயிகளுக்கு மேட்டு நிலங்களை சமன்படுத்தி தருதல் உட்பட, 11 வகையான திட்ட பணிகள் செய்யப் படுகிறது. இப்பணிகள், திருத்தணி ஒன்றியம், சூர்யநகரம், கிருஷ்ண சமுத்திரம், கோரமங்கலம், தாடூர், அகூர், மத்தூார், அலுமேலுமங்காபுரம், முருக்கம்பட்டு, தரணிவராகபுரம், கார்த்திகேயபுரம் ஆகிய, 10 ஊராட்சி களில் செயல்படுத்தி வருகிறது.இந்த நிலையில், தற்போது, விவசாயிகள் பண்ணை காடுகள் வளர்க்க (சவுக்கு, தேக்கு) 10 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. டிச., 10க்குள்... இதுகுறித்து, திட்ட வளர்ச்சி அலுவலர் கோபிநாத் கூறுகையில், "பண்ணை காடு வளர்க்க, ஒரு விவசாயிக்கு, 6,000 ரூபாய் மதிப்பிலான செடிகள், உரம் மற்றும் இடுபொருட்கள் வீதம், அடுத்த மாதம் இறுதிக்குள், மொத்தம், 160 விவசாயிகளுக்கு வழங்கப்படும். ஆர்வமுள்ள விவசாயிகள், நிலத்தின் சிட்டா

மற்றும் விண்ணப்பத்துடன், டிச., 10ம் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும்,"என்றார். முன்னுரிமை அடிப்படையில்... மேலும், "மேற்கண்ட, 10 ஊராட்சிகளில் உள்ள விவசாயிகள் மட்டும் தான் விண்ணப்பிக்க வேண்டும். முன்னுரிமை அடிப்படையில், விவசாயிகளுக்கு வழங்கப்படும். மேலும் விவரங்களுக்கு திருத்தணி சுப்ரமணிய நகரில் உள்ள, எங்களது கிளை அலுவலகத்திற்கு நேரில் வரலாம் அல்லது, 95859 33371 என்ற அலைபேசியில் தொடர்பு கொண்டும் தெரிந்துக் கொள்ளலாம்," என்றார்.

**<u>கால்நடைகள் காப்பகம் கட்ட முடிவு</u>**

திருவள்ளூர் : ஆதரவற்ற கால்நடைகளுக்கு, காப்பக கட்டடம் கட்டப்படும் என, ஆட்சியர் தலைமையிலான ஆலோசனை கூட்டத்தில் முடிவு செய்யப் பட்டது. திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கத்தில், பிராணிகள் வதை தடுப்புச் சங்கம் செயல்பாடுகள் குறித்து, ஆட்சியர் வீர ராகவ ராவ் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடந்தது.மாவட்டத்தில், பிராணிகள் வதை தடுப்புச் சங்கத்தை செயல்படுத்துதல், நோயுற்ற மற்றும் ஆதரவற்ற கால்நடைகளுக்கான காப்பக கட்டடம் கட்டுவதற்கு நிலம் ஒதுக்கீடு செய்தல்; சாலைகளில் போக்குவரத்திற்கும், பகுதிவாசிகளுக்கும் இடையூறாக திரியும் கால்நடைகளை பிடித்து, பட்டியில் அடைத்து ஏலம் விடுவது குறித்து, ஆலோசனை நடத்தப்பட்டது. கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் முத்து, கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குனர் (பொறுப்பு) மருத்துவர் பாத்திமா பீவி, துணை ஆட்சியர் ராகுல்நாத் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**<u>நெற்பயிர்களை கடித்து வீணாக்கும் எலிகளுக்கு பொறி</u>**

பொன்னேரி : விளைநிலங்களில் நெற்பயிர்களை கடித்து வீணாக்கும் எலிகளை பிடிக்க, ஆந்திர வேட்டையர்கள், கிராமங்களில் முகாமிட்டு உள்ளனர். பொன்னேரி அடுத்த, மெதுார், வேம்பேடு உள்ளிட்ட

கிராமங்களில் சம்பா பருவத்திற்காக, நெல் பயிரிடப்பட்டு உள்ளது. நெற்பயிர்கள் பூ பூக்கும் தருவாயில் உள்ளன. அவற்றை உண்பதற்காக வயல்வெளிகளில் சுற்றித்திரியும் எலிகள், நெற்பயிர்களை கடித்து வீணாக்கி வருகின்றன.தண்ணீர் இல்லாத வயல்களில், எலிகளின் ஆதிக்கம் அதிகரித்து உள்ளதால், அதை கட்டுப்படுத்த முடியாமல், விவசாயிகள் தவிக்கின்றனர். வளரும் பருவத்தில் இருக்கும் நெற்பயிர்களை, எலிகளிடம் இருந்து பாதுகாக்க, அவற்றை வேட்டையாட ஆந்திர வேட்டையர்கள் களமிறக்கப்பட்டு உள்ளனர்.அதற்காக, எலிப்பொறிகளுடன் ஆந்திர வேட்டையர்கள் கிராமங்களில் முகாமிட்டு, விளைநிலங்களை சுற்றிலும், கிட்டி என, அழைக்கப்படும் பொறிகளை வைக்கின்றனர். ஒரு ஏக்கருக்கு, 200 பொறிகள் வைத்து வேட்டையாடுகின்றனர். பிடிபடும் எலிகளுக்கு, தலா, 15 ரூபாய் கட்டணம் என, விவசாயிகளிடம் இருந்து வசூலிக் கின்றனர்.விவசாயிகளும் நெற்பயிர்களை காக்க, பணம் கொடுத்து எலிகளை வேட்டையாடி வருகின்றனர்.

**<u>இலைக்கருகல் நோயை கட்டுப்படுத்த ஐந்து வழிமுறைகளை பின்பற்றலாம்</u>**

திண்டிவனம் : நெல் பயிரில் பரவி வரும் பாக்டீரியா இலைக்கருகல் மற்றும் இலை கீற்று நோயை கட்டுப்படுத்த வயலில் தேங்கியுள்ள நீரை வடிய செய்ய வேண்டும். திண்டிவனம் எண்ணெய் வித்துக்கள் ஆராய்ச்சி நிலைய நோயியல் துறை பேராசிரியர் ராஜ்குமார் விடுத்துள்ள செய்திக்குறிப்பு: வயலில் தேங்கியுள்ள அதகப்படியான நீரை வடிய செய்தல் வேண்டும். பரிந்துரைத்த தழைச் சத்தை மேல் உரமாக பிரித்து துளிர் கட்டும் பருவம், கதிர் உருவாகும் பருவம் மற்றும் கதிர் வெளிவரும் பருவங்களில் இட வேண்டும். இந்நோய்களின் ஆரம்ப நிலையில் புதிய மாட்டு சாணக் கரைசலை 20 சதவீதம் தயாரித்து ( 20 கிலோ மாட்டு சாணம் மற்றும் 100 லிட்டர் தண்ணீர்) 15 நாட்கள் இடைவெளியில் இரு முறை தெளிக்க

வேண்டும்.இந்நோய் தாக்கம் அதிகமாக காணப்படும் வயல்களில் ஏக்கருக்கு காப்பர் ஹைட்ராக்சைடு 77 டபிள்யூபி லிட்டருக்கு 1 கிராம் என்ற விகிதத்தில் கலந்து தெளித்து கட்டுப்படுத்தாலம். அல்லது ஸ்டெப்டோ மைசின் மற்றும் டெட்ராசைக்கிளின் 120 கிராம் மற்றும் காப்பர் ஆக்சி குளோரைடு 500 கிராம்/ஏக்கர் ஆகியவற்றை ஒட்டும் திரவத்துடன் கலந்து தெளிக்க வேண்டும்.இலை மடக்கு புழுவை கட்டுப்படுத்த கார்டாப் ஹைட்ரோ குளோரைடு 4 சத குருணை மருந்தை 6.5-7கிலோ ஏக்கருக்கு என்ற அளவில் இட்டும் அல்லது ஃபுரபினோபாஸ் 50 சதம் 400 மில்லி லிட்டர் ஏக்கருக்கு என்ற அளவில் தெளித்தும் பூச்சிகளை கட்டுப்படுத்தலாம்.இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**<u>தென்னங்கன்று வழங்கல்</u>**

கச்சிராயபாளையம் : தாவடிபட்டு கிராமத்தில் ஊராட்சி சார்பில் மக்களுக்கு இலவசமாக தென்னங்கன்று வழங்கப்பட்டது.கச்சிராயபாளையம் அடுத்த தாவடிப்பட்டு கிராமத்தில் உள்ள 620 குடும்பங்களுக்கும் தலா ஒரு தென்னங்கன்று ஊராட்சி சார்பில் இலவசமாக வழங்கப்பட்டது. ஊராட்சி தலைவர் அமுதா பொன்னுசாமி தலைமை தாங்கி, மரக் கன்றுகளை வழங்கினார். ஊராட்சி துணை தலைவர் சகாதேவன், உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**<u>விவசாயிகளுக்குதொழில்நுட்ப பயிற்சி</u>**

நாமக்கல்:விதை கிராம திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கு பயிறு வகை சாகுபடி குறித்த பயிற்சி நடந்தது.நாமக்கல் வட்ட வேளாண் விரிவாக்க மையம் சார்பில், பயிறு வகைகளில் உயர் விளைச்சல் தொடர்பாக வேளாண் தொழில்நுட்ப பயிற்சி, விதை கிராம திட்டத்தின் கீழ், மரூர்பட்டி கிராமத்தில் நடந்தது. உதவி இயக்குனர் மாயக்கிருஷ்ணன் தலைமை வகித்தார். விவசாயிகளுக்கு தேவையான சான்று விதைகளை, தாங்களே தங்களது

நிலங்களில் உற்பத்தி செய்து கொள்ள வேண்டும். சான்று விதைகளை விதை நேர்த்தி செய்து, மண்ணாய்வு சிபாரிசுபடி உரச்செலவை குறைக்க வேண்டும். ஒருங்கிணைந்த முறையில் நீர்பாய்ச்சுதல், பயிர் பாதுகாப்பு முறைகளை கையாள வேண்டும் என்பது உள்ளிட்ட ஆலோசனை வழங்கப்பட்டது. வட்டார வேளாண் அலுவலர் பேபிகலா, உயிரியல் கட்டுப்பாட்டு அலுவலர் ராணி, தொழில்நுட்ப மேலாளர் சுபத்ரா, உதவி விதை அலுவலர் ஜெயபிரகாஷ் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

**<u>ரசிக்க வைக்கிறது 'டார்ச் லில்லி' மலர்</u>**

நீலகிரி மாவட்டம், குன்னுாரில், பல தனியார் பங்களாக்களில் 'டார்ச் லில்லி' எனப்படும் மலர்கள் அதிகளவில் மலர்ந்துள்ளன. 'நிபோஃபியா' தாவரவியல் குடும்பத்தை சேர்ந்த இந்த செடியில், பூக்களின் தண்டு, 60 செ.மீ., முதல் 150 செ.மீ., உயரம் வரை நீண்டு, உயர்ந்து வளர்கிறது. ஆரஞ்சு, மஞ்சள், பச்சை கலந்த நிறத்தில் இந்த மலர்கள், 'ரெட் ஹாட் போக்கர்' என்றும் அழைக்கப்படுகின்றன. ஆஸ்திரேலியா மற்றும் அமெரிக்காவில் இந்த மலர்ச்செடிகள் அதிகளவில் வளர்க்கப்படுகின்றன. குன்னுாரில் மலர்ந்துள்ள இந்த மலர்களை சுற்றுலா பயணிகள் வெகுவாக ரசித்து செல்கின்றனர்.

**<u>கால்நடை பராமரிப்பு துறையினர் கோழி பண்ணைகளில் ஆய்வு</u>**

பந்தலுார் : பந்தலுார் பகுதியில் உள்ள கோழி பண்ணைகளில் கால்நடை பராமரிப்புத்துறையினர் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர். கேரளா மாநிலத்தில் பறவை காய்ச்சல் பரவிவருவதையடுத்து. நீலகிரி மாவட்ட எல்லையோர பகுதிகளில் கால்நடை பராமரிப்பு துறையினர் தொடர் ஆய்வுப்பணியில் ஈடுபட்டுள்ளனர். இந்நிலையில், பந்தலுார் தாலுகாவில் உள்ள கோழிக்கடைகளில், உதவி இயக்குனர் தயாசேகர் நேரடியாக சென்று,கோழிகளின் நிலை குறித்து ஆய்வு செய்தார்.மேலும், குந்தலாடி பகுதியில் செயல்படும் கோழி பண்ணையிலும் நேரடி ஆய்வு மேற்கொண்டு,

"பாதுகாப்பு முறைகள், நோய் தாக்கம் ஏற்பட்டால், மேற்கொள்ள வேண்டிய தடுப்பு முறைகள் குறித்து' விளக்கம் அளித்தார். உதவி இயக்குனர் தயாசேகர் கூறுகையில்,""கோழிப்பண்ணை உள்ள கோழிகளுக்கு நோயின் தாக்கம் குறித்த சந்தேகம் ஏற்பட்டால், உடனடியாக அருகிலுள்ள கால்நடை மருத்துவரிடம் ஆலோசனை கேட்க வேண்டும்," என்றார்.

## <u>பறவை காய்ச்சல் தடுப்பு ஆலோசனைக் கூட்டம்</u>

விழுப்புரம் : மாவட்டத்தில் பறவை காய்ச்சல் நோய் வராமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை தொடர்பான ஆலோசனை கூட்டம் கலெக்டர் அலுவலகத்தில் நடந்தது. கலெக்டர் சம்பத் தலைமை தாங்கினார். கால்நடை பராமரிப்பு இணை இயக்குநர் அப்சல், உதவி இயக்குநர் மகேந்திரன், வட்டார போக்குவரத்து அலுவலர் பாஸ்கர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.மாவட்டத்தில் பறவை காய்ச்சல் வராமல் தடுக்க கால்நடை பராமரிப்பு துறை மூலம் 9 குழு அமைக்கப்பட்டுள்ளது. சோதனை சாவடிகளில் சோதனையில் போலீசார் ஈடுபடும் போது, கேரளா, ஆந்திரா மாநில வாகனங்களில் கோழி மற்றும் வாத்துகள் கொண்டு வருவதை தடுக்க வேண்டும்.வெளிநாட்டிலிருந்து வரும் பறவைகள் மூலமும் இந்த நோய் பரவும். பண்ணையாளர்கள் கோழி, வாத்து பராமரிக்கும் இடங்களை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் வைக்க வேண்டும்.பறவை காய்ச்சல் வைரஸ் தொற்று நோயாகும். நோய் தாக்கினால் சிகிச்சை ஏதுமில்லை. நோய் வராமல் தடுக்க சுகாதார தடுப்பு நடவடிக்கைகள் முறையாக கையாள வேண்டும். மனிதர்களை தாக்கினால் காய்ச்சல், தொண்டை புண், இருமல், கண்களில் புண், மூச்சு திணறல் ஏற்படும்.பண்ணை வேலையாட்கள் கையுறைகள், முகமூடி மற்றும் ரப்பர் காலுறைகள் அணிந்து பணி செய்ய வேண்டும். கோழிகள், வாத்துகள் மற்றும் வான்கோழிகளை ஒரே

பண்ணையில் வைத்து பராமரிப்பதை தவிர்க்க வேண்டும்.இவ்வாறு கலெக்டர் சம்பத் தெரிவித்தார்.

**<u>பசுமை பரப்பளவை அதிகரிக்க30 லட்சம் மரக்கன்று நட திட்டம்</u>**

தஞ்சாவூர்:தஞ்சாவூர் மாவட்டத்தில் பசுமை பரப்பளவை அதிகரிக்கும் விதமாக, 30 லட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு, தன்னார்வ அமைப்புகளுக்கு மாவட்ட நிர்வாகம் அழைப்பு விடுத்துள்ளது. இதுகுறித்து மாவட்ட கலெக்டர் சுப்பையன் வெளியிட்டுள்ள அறிக்கை: சுற்றுச்சூழலை பாதுகாப்பதிலும், இயற்கை இடர்பாடுகளால் சீதோஷ்ண நிலை மாறுபடுவதை கட்டுப்படுத்துவதிலும் காடுகள் முக்கிய பங்கு வகிக்கிறது. இந்தியாவின் மொத்த பரப்பளவில் காடுகள், 24 சதவீதமாக உள்ளது. தமிழகத்தில் காடுகளின் பரப்பளவு, 13 சதவீதமாக உள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தில் காடுகளின் பரப்பளவு வெறும், 5.71 சதவீதமாக உள்ளது. இதன் காரணமாக, மாவட்டத்தில் பசுமை பரப்பளவை அதிகரிக்க வேண்டியது அவசியமாகிறது. இதற்காக, மாவட்டம் முழுவதும் ஒரே நாளில், 30 லட்சம் மரக்கன்றுகள் நடவு செய்வதென திட்டமிடப் பட்டுள்ளது. இதற்காக, தோட்டக்கலைத் துறை மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் மூலம், 33 லட்சம் மரக்கன்றுகள் தயார் படுத்தப் பட்டுள்ளது.தஞ்சாவூர் மாநகராட்சி பகுதிகள், பட்டுக்கோட்டை, கும்பகோணம் நகராட்சி பகுதிகள், 14 பஞ்சாயத்து யூனியன் பகுதிகள், 22 டவுன் பஞ்சாயத்து பகுதிகள் மற்றும், 589 கிராம பஞ்சாயத்து பகுதிகளில் வரும், 30ம் தேதி, 30 லட்சம் மரக்கன்றுகள் நடவு செய்யப்பட உள்ளது. இத்திட்டத்தை செயல்படுத்துவதற்காக, மாவட்ட நிர்வாகத்துக்கு பொதுமக்கள் மற்றும் தன்னார்வ அமைப்பினர் தங்களுடைய பங்களிப்பையும், ஒத்துழைப்பையும் வழங்க வேண்டும். இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

## டெல்டா விவசாயிகள் சம்பா சாகுபடிக்குரூ.25 ஆயிரம்: கூட்டுறவு வங்கி வழங்கல்

தஞ்சாவூர்:டெல்டா மாவட்டங்களில் சம்பா நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு, 25 ஆயிரம் ரூபாய் பயிர்கடன் வழங்க மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி முடிவு செய்துள்ளது.தஞ்சை, நாகை, திருவாரூர் டெல்டா மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கு, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம், பயிர்கடன் வழங்குவதற்கான தொழில்நுட்ப குழு கூட்டம், தஞ்சையில் நடந்தது. மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் துரை திருஞானம் தலைமை வகித்தார். இதர கூட்டுறவு வங்கி தலைவர்கள், துணைத் தலைவர்கள், கூட்டுறவு வங்கி அதிகாரிகள், கூட்டுறவுத்துறை அதிகாரிகள், வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை உள்ளிட்ட அரசுத்துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள் பலர் பங்கேற்றனர். நடப்பாண்டில்(2015-16) சம்பா, தாளடி மற்றும் குறுவை நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு பயிர் கடனாக ஏக்கர் ஒன்றுக்கு, 25 ஆயிரம் ரூபாய் வீதம் வழங்கப்படும். இதர பயிர் வகைகளான கரும்புக்கு, 48 ஆயிரம் ரூபாய், மக்காச் சோளத்துக்கு, 20 ஆயிரம் ரூபாய், பருப்பு வகைகளுக்கு,12 ஆயிரம் ரூபாய், நிலக்கடலைக்கு, 20 ஆயிரம் ரூபாய், பருத்திக்கு, 19 ஆயிரம் ரூபாய், மரவள்ளி கிழங்குக்கு, 16 ஆயிரம் ரூபாய், தென்னை பராமரித்தலுக்கு, 20 ஆயிரம் ரூபாய் வீதம் கடன் வழங்குவதென கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது.

## விலையில்லா கால்நடைகள் அதிகாரிகளுடன், கலெக்டர்ஆய்வு

திருவாரூர்: திருவாரூர் மாவட்டத்தில் தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ள விலையி ல்லா வெள்ளாடு மற்றும் கறவை பசுக்கள் பராமரிப்பு குறித்து துறை அதிகாரிகளுடன் கிராமங்களில் கலெக்டர் ஆய்வு செய்தார். தமிக அரசு மூலம் கிராமப்புற மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தும்

நோக்கில் விலையில்லா வெள்ளாடு மற்றும் கறவை பசுக்கள் வழங்கப் பட்டுள்ளதுடன்,கோழி உள்ளிட்ட பல்வேறு அவிருத்தி திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. திருவாரூர் மாவட்டத்தில் இதுவரை 4 கோடியே 27 லட்சத்து 32 ஆயி ரம் செலவில் ஆயிரத்து 200 பசுக்கள் மற்றும் தலா 4 வெள்ளாடுகள் வீ தம் 10 ஆயிரத்து 638 பயனாளிகளுக்கு 13 கோடியே 82 லட்சத்து 94 ஆயிரம் செலவில் வெள்ளாடுகள் வழங்கப்பட்டுள்ளது. கிராமப் புறங்களில் வழங்கப்பட்டுள்ள கால்நடைகளை பயானாளி பாதுகாத்து பயன் பெறும் முறைகளை துறை அதிகாரிகளுடன் கலெ க்டர் மதிவாணன் திருவாரூர் அருகே வேலங்குடி மற்றும் தண்ட ளை உள்ளிட்ட பகுதிக ளில் ஆய்வு செய்து விவசாயிகளிடம் மேலும் குறை களை கேட்ட றிந்தார்.

## <u>போடி பகுதியில் கரும்பு நடவு பணி துவக்கம்</u>

போடி:போடி பகுதியில் கரும்பு நடவு செய்யும் பணி துவங்கியுள்ளதை அடுத்து விவசாய கூலித்தொழிலாளர்கள் வேலை கிடைத்துள்ளதால் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தேனி மாவட்டத்தில் போடி, முந்தல், அணைக்கரைப்பட்டி, கோடாங்கிபட்டி, பெரியகுளம், லெட்சுமிபுரம் உள்ளிட்ட பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் கரும்பு பயிரிடப் பட்டுள்ளன. போடி பகுதியில் ஆண்டு முழுவதும் கரும்பு சாகுபடி இருந்து வருகிறது. கரும்பு பயிரிட்டு 10 வது மாதத்தில் அறுவடை செய்யப்படும். கரும்பிற்கு நல்ல விலை கிடைப்பதால் கரும்பு பயிரிட்ட விவசாயிகள் எப்போதும் கரும்பு பயிரிடவே ஆர்வம் காட்டி வருகின்றனர். விளைந்த கரும்பினை சில விவசாயிகள் சர்க்கரை ஆலைகளுக்கு அனுப்பி விடுவர். பல விவசாயிகள் தாங்களாகவே கரும்பினை கொப்பறை மூலம் ஆட்டப்பட்டு உருண்டை வெல்லம் தயாரிக்கவும் பயன்படுத்துகின்றனர். சபரிமலை சீசனுக்கான கரும்பு அறுவடை செய்து முடித்துவிட்டு, தற்போது மீண்டும் கரும்பு நடவு செய்வதற்கான ஆயத்த பணியில் விவசாயிகள்

ஈடுபட்டுள்ளனர். இதனால் தொடர்ந்து வேலை கிடைக்கும் என்பதால் விவசாய கூலித்தொழிலாளர்களுக்கு மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**<u>கேரளாவில் பறவை காய்ச்சல்: சோதனை சாவடிகளில் "அலர்ட்'</u>**

கம்பம்:கேரளாவில் பறவைக் காய்ச்சல் எதிரொலியாக தேனி மாவட்டத்தில் கேரளாவை இணைக்கும் இடத்தில் உள்ள கம்பம்மெட்டு, போடிமெட்டு, குமுளி சோதனை சாவடிகளில் கால்நடைபராமரிப்புத் துறையினர் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். கேரளா ஆலப்புலா மாவட்டத்தில் பறவைக்காய்ச்சல் பரவியுள்ளது. ஏராளமானோர் பாதிக்கப்பட்டு அங்குள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. இதையடுத்து தமிழக அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்து வருகிறது.தேனி மாவட்டத்தில் கேரளாவை இணைக்கும் கம்பம்மெட்டு, போடிமெட்டு, குமுளி சோதனை சாவடிகளில் கால்நடை பராமரிப்புத்துறையினர் முகாமிட்டு கேரளாவில் இருந்து வரும் வாகனங்களை கண்காணித்து வருகின்றனர்.உத்தமபாளையம் உதவி இயக்குனர் ஜெகதீசன் கூறுகையில், "தேனி மாவட்டத்தில் மூன்று கண்காணிப்பு சிறப்பு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. கோழிப்பண்ணை கள், வாத்து வளர்க்கும் இடங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சோதனை சாவடிகளில் கேரளாவில் இருந்து வரும் கோழி மற்றும் அதை சார்ந்த பொருள்களை நிறுத்தி வைக்க கூறியுள்ளோம்" என்றார்.

**<u>கிராமங்களில் செவ்வந்தி பூ சாகுபடி: விலை அதிகரிப்பால் "கிராக்கி'</u>**

சிவகங்கை:மாவட்டத்தில் சமீபத்தில் பெய்த மழையால் சிவகங்கையை சுற்றியுள்ள பெரும்பாலான கிராமங்களில் விவசாயிகள் காய்கறிக்கு அடுத்த படியாக செவ்வந்திப்பூ சாகுபடியில் ஆர்வம் செலுத்தி வருகின்றனர். சிவகங்கை - மேலூர் ரோட்டில் கண்டாங்கிபட்டி, உசிம்பட்டி, கூட்டுறவு பட்டி, பாப்பாகுடி, பெருமாள்பட்டி, மலம்பட்டி, கீழ-மேலச்சாலூர், சானிப்பட்டி உள்ளிட்ட சுற்றுவட்டார கிராமங்களில் வாழை, கரும்பு,

வெண்டை, தக்காளி, கத்தரி, கீரை சாகுபடி செய்து வருகின்றனர். தினமும் பறிக்கப்படும் காய்கறிகள் மற்றும் கீரைகள் சிவகங்கை உழவர் சந்தை மற்றும் வாரச்சந்தைகளில் விவசாயிகள் விற்று வருகின்றனர். கடந்த 2 ஆண்டுகளாக மழை பெய்யாததால், நீர் நிலைகள் மற்றும் விவசாய கிணறுகளில் தண்ணீர் வற்றியது.பெரும்பாலான விவசாயிகள் விவசாய தொழிலுக்கு தற்காலிகமாக முழுக்கு போடும் அவல நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். விவசாயிகள் பலர் பிழைப்பு தேடி மாற்றுத்தொழிலுக்கு சென்றனர். இந்நிலையில், விவசாயத்திற்கு புத்துணர்ச்சியூட்டும் வகையில் சமீபத்தில் மாவட்டத்தில் பரவலாக மழை பெய்தது. இதனால், தற்போது விவசாய தொழில் மும்முரமாக நடந்து வருகிறது. மற்றொரு புறம், செவ்வந்திப்பூ சாகுபடியில் பெரும்பாலான விவசாயிகள் ஆர்வமுடன் ஈடுபட்டுள்ளனர். கோயில்,விசேஷ நாட்களில் இதுபோன்ற பூக்களுக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளதால் மொத்த வியாபாரிகள் விவசாயிகளிடம் கூடுதல் விலை கொடுத்து வாங்கிச் செல்கின்றனர். விவசாயி, பாக்கியம், சாலூர்: வாழை, நெல், கடலை, வெங்காயம், மிளகாய் சாகுபடி செய்துள்ளோம். இதுதவிர, ஒரு ஏக்கரில் செவ்வந்திப்பூ சாகுபடி செய்துள்ளோம். கோயில், விசேஷ நாட்கள் அடுத்தடுத்து வருவதால் இந்த பூவிற்கு வெளி மார்க்கெட்டில் கிராக்கி ஏற்பட்டுள்ளது. கிலோ 25க்கு வாங்கிய மொத்த வியாபாரிகள் கிராக்கி அதிகரிப்பால் கிலோ 40 ரூபாய் வரை வாங்கிச் செல்கின்றனர். இதனால், ஏக்கருக்கு 7 முதல் 10 ஆயிரம் ரூபாய் வரை இதன் மூலம் வருமானம் கிடைக்கிறது, என்றார்.

## <u>கேரள லாரிகளுக்கு கிருமிநாசினிகால்நடைத்துறை முன்னெச்சரிக்கை</u>

திருநெல்வேலி:கேரளாவில் இருந்து வரும் லாரிகளை கிருமிநாசினி மூலம் நோய்த்தடுப்பு நடவடிக்கை மேற்கொண்டு அனுப்பப்படுகிறது. கேரள மாநிலம் ஆலப்புழை மாவட்டத்தில் கோழி, வாத்து போன்றவை ஆயிரக்கணக்கில் இறந்துள்ளன.அங்கு பறவைகாய்ச்சல் நோய்

ஏற்பட்டுள்ளதாக பீதி ஏற்பட்டுள்ளது. எனவே கேரளாவில் இருந்து தமிழகத்திற்குள் கோழிஇறைச்சி, கோழித்தீவனம் கொண்டுவரும் லாரிகள் மூலம் பறவைக்காய்ச்சல் நோய் ஏற்படாமல் தடுக்கும் நடவடிக்கைகளில் கால்நடைத்துறையினர் ஈடுபட்டுவருகின்றனர். நெல்லை மாவட்டத்தில் கேரள எல்லையான புளியறையில் இதற்காக கால்நடைத்துறையினர் நியமிக்கப்பட்டு லாரிகள் மீது கிருமிநாசினி தெளிக்கப்பட்டும் நோய்பரப்பும் கிருமிகள் குறித்து ஆய்வுக்கு பின்னரும் அனுப்பப்படுகின்றன. இந்த பணி இன்னமும் சில தினங்களுக்கு தொடரும் என தெரிகிறது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>தென் மாவட்டங்களில் கனமழை நீடிக்கும்</u>**



சென்னை : தென் மேற்கு வங்கக் கடலில் நிலை கொண்டு இருந்து குறைந்த காற்றழுத்தம் அதே இடத்தில் நீடிப்பதை அடுத்து தென் மாவட்டங்களில் இன்றும் கனமழை நீடிக்கும் எ ன்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. நேற்று முன்தினம் தென் மேற்கு வங்கக் கடலில் மையம் கொண்டு இருந்த குறைந்த காற்றழுத்தம், தொடர்ந்து அதே இடத்தில் நீடிப்பதால் தென் மாவட்டங்கள் மற்றும் அதை ஒட்டிய கடலோரப் பகுதியில் கனமழை பெய்து வருகிறது. அதேபோல கேரளா, ராயலசீமா, லட்சத்தீவு ஆகிய இடங்களிலும் கனமழை பெய்து வருகிறது. இந்நிலையில், அந்த குறைந்த காற்றழுத்தம் தற்போது இலங்கை ஒட்டிய தென்மேற்கு வங்கக் கடலில் மையம் கொண்டுள்ளது. இதனால் தென் மாவட்டங்களில் இன்றும்

கனமழை பெய்யும். ராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, மதுரை, தேனி, திண் டுக்கல், சிவகங்கை, விருதுநகர், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களிலும் கனமழை பெய்யும். தமிழகத்தின் மற்ற மாவட்டங்களிலும் பரவலாக மழை பெய்யும்.

## 6 ஆயிரம் ஏக்கர் தரிசு நிலங்களை சாகுபடிக்கு கொண்டுவர திட்டம்

விழுப்புரம், : தமிழகத்தில் விவசாயத்தில் பெரும்பங்கு வகிக்கும் விழுப்புரம் மாவட்டத்தில் வேளாண்துறை, தோட்டக்கலைத்துறையின் நவீன சாகுபடி, அரசு மானியம் குறித்து பொதுமக்கள், விவசாயிகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அதிகாரிகள், ஊடகத்துறையினரின் சுற்றுப்பயணம் விழுப்புரம் மாவட்டத்தில் நடந்தது. திருநாவலூர் ஒன்றியம் மேட்டத்தூர் கிராமத்தில் அபிராமன் என்ற விவசாயி அமைத்த சூரியஒளியின் மூலம் இயங்கும் மின்மோட்டார் திட்டத்தை அதிகாரிகள் பார்வையிட்டனர். இதன் மொத்த தொகை ரூ.4 லட்சத்துக்கு 39 ஆயிரத்து 950 தொகையில் அரசு மானியமாக ரூ.3 லட்சத்து 35 ஆயிரத்து 200 வழங்கியுள்ளது. விவசாயி களின் பங்களிப்பாக ரூ. 1 லட்சத்து 4 ஆயிரத்து 750 மூலம் விவசாயிகள் பயனடையலாம் என்று வேளாண்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். தொடர்ந்து தென்னைவளர்ச்சி வாரியம் மூலம் 11 ஹெக்டரில் அமைக்கப் பட்ட தென்னை மரக்கன்றுகளை பார்வையிட்டனர். இதற்கு தமிழக அரசு 50 சதவீதம் மானியமாக வழங்குகிறது. அதன்படி ஹெக்டருக்கு ரூ. 17,500 மானியம் வழங்கப்படுகிறது. மேலும் தோட்டக்கலைத்துறை மூலம் 75 சதவீத மானியத்துடன் சொட்டு நீர்ப்பாசன வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தனர். தொடர்ந்து நவீனமுறையில் கரும்பு சாகுபடி மற்றும் முந்தரி சாகுபடிக்கு அரசு வழங்கும் மானியம் ஆகிய திட்டங்களை அதிகாரிகள் தெரிவித்தனர். தொடர்ந்து திருந்திய நெல்சாகுபடி திட்டத்தை பார்வையிட்டனர். ஆய்வுக்கு பின்னர் வேளாண் இணை

இயக்குநர் ராஜாமணி கூறுகையில், விவசாயிகள் அரசு வழங்கும் மானியங்களை முழுமையாக தெரிந்துகொண்டு பயனடைய வேண்டும். 2014-15ம் ஆண்டில் 6 ஆயிரம் ஏக்கர் தரிசு நிலங்களை சாகுபடிக்கு கொண்டுவர திட்டமிட்டு அதற்கான பணிகள் நடந்துவருகின்றது. மாவட்டத்துக்கு மொத்தம் 10 ஆயிரம் மெட்ரிக் டன் உரங்கள் வருவது வழக்கம். ஆனால் சில உர நிறுவனங்கள் மூடப்பட்டதால் 4 ஆயிரம் டன் வந்துள்ளது. இதனால் தட்டுப்பாடு ஏற்பட்டது. இது ஓரளவுக்கு சரி செய்யப்பட்டுள்ளது. மீண்டும் உரஆலைகள் திறக்கப்பட்டுள்ளதால் படிப்படியாக உரத்தட்டுப்பாடு நீங்கும் என்றார். நிகழ்ச்சியின் போது தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர் வீராசாமி, நேர்முக உதவியாளர் ஆறுமுகம், உதவி இயக்குநர்கள் அலெக்சாண்டர், தேவநாதன், வேளாண்மை அலுவலர்கள் கதிரேசன், செந்தில்குமார், செய்தி மக்கள்தொடர்பு அலுவலர் சிங்காரம் ஆகியோர் உடனிருந்தனர்.

**<u>வரத்து குறைந்ததால் அவரைக்காய் விலை உயர்வு</u>**

சேலம், : கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரி, ஜிட்டாண்ட அள்ளி, ராயக்கோட்டை பகுதியிலும், சேலம் மாவட்டம் பனமரத்துப்பட்டி, தாரமங்கலம், ஓமலூர், வாழப்பாடி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதி களிலும் அதிகளவில் அவரைக்காய் சாகுபடி செய்யப்படுகிறது. கடந்த இரு மாதங்களாக அவரைக்காய் சீஸன் களைகட்டியதால் வரத்து அதிகரித்து விலை குறைந்திருந்தது. தற்போது சீசன் முடியும் தருவாயில் உள்ளதால் வரத்து குறைந்து, விலை அதிகரித்துள்ளது. இதன்படி, கடந்த மாதத்தில் தினமும் 150 மூட்டைகளில் வந்த அவரை, தற்போது 80 மூட்டைகளாக குறைந்துள்ளது. இதனால், ஒரு கிலோ ரூ20க்கு விற்கப்பட்டு வந்த அவரைக்காய் தற்போது ரூ 40க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதுகுறித்து வியாபாரிகள் கூறியதாவது, கடந்த இரு மாதமாக சீசன் களைகட்டி

யிருந்ததால், எப்போதும் இல்லாத அளவிற்கு வரத்து இருந்தது. வரும் நாட் களில் வரத்து குறைய வாய்ப்புள்ளதால், அவரைக்காயின் விலை மேலும் உயரும் என்றனர்.

**<u>28, 29 ஆகிய தேதிகளில் கால்நடைகளுக்கான மருத்துவ முகாம்</u>**

காஞ்சிபுரம், : காஞ்சிபுரம் கலெக்டர் சண்முகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: விலையில்லா கறவை பசு மற்றும் வெள்ளாடு வழங்கும் திட்டத்தின் கீழ் தமிழகத்தில் வறுமை கோட்டுக்கு கீழ் உள்ள பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில் ஒரு பயனாளிக்கு 4 வெள்ளாடு, செம்மறி ஆடுகள் வீதம் 31 மாவட்டங்களில். 4 லட்சத்து 88 ஆயிரத்து 273 பயனாளிகளுக்கு 19 லட்சத்து 53 ஆயிரத்து 92 வெள்ளாடு, செம்மறி ஆடுகள் வழங்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் மீண்டும் ஒரு வெண்மை புரட்சியை உருவாக்கும் வகையில் 21 மாவட்டங்களில் 42,608 பயனாளிகளுக்கு 42,608 கறவை பசுக்கள் வழங்கப்பட்டுள்ளன. பயனாளிகளை ஊக்கப்படுத்தும் வகையில் கால்நடைகளை சிறப்பாக பராமரித்த பயனாளிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டு வருகிறது. விலையில்லா கறவை பசு மற்றும் வெள்ளாடுகளின் உற்பத்தியை பெருக்கும் வகையிலும் எடையை அதிகரித்து இனப்பெருக்காக வரும் 28, 29 தேதிகளில் மாவட் டம் முழுவதும் அந்த ஊராட்சிகளில் மருத்துவ பரிசோதனை மற்றும் வெள்ளாடுகளுக்கு குடல்புழு நீக்க முகாம் நடத்தப்படுகிறது. எனவே, இந்த வாய்ப்பை பயனாளிகள் பயன்படுத்தி கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**<u>யூரியா மூட்டை ரூ270.50க்கு விற்பனை இரண்டாம் போக சாகுபடிக்கு உரங்கள் தயார் நிலையில் உள்ளது</u>**

கிருஷ்ணகிரி, : கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இரண்டாம் போக சாகுபடி க்கு உரங்கள் தயார் நிலையில் உள்ளதாக கலெக் டர் தெரிவித்துள் ளார். கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் உரம் மற்றும் பூச்சி மருந்து

விற்பனையாளர்கள், வேளாண்மை துறை அலுவலர்கள், கூட்டுறவு இணைப்பதிவாளர் ஆகியோருடனான சிறப்பு ஆலோசனை கூட்டம் நடந்தது. மாவட்ட கலெக் டர் ராஜேஷ் தலைமை வகித்தார். அப்போது உரங்கள் குறிப்பாக யூரியா, டி.ஏ.பி. பொட்டாஷ் மற்றும் கலப்பு உரங்கள் இருப்பு குறித்தும், அடுத்த ஒரு மாதத்திற்கு தேவையான உரங்கள் குறித் தும் விவாதிக்கப்பட்டது. அப்போது கலெக்டர் பேசியதாவது: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இரண்டாம் போக நெல் சாகுபடிக்கு போது மான நீர் ஆதாரம் உள்ளதால், இப்பருவத்தில் நெல் சுமார் 10 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவிலும், இற வை ராகி 5 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவிலும், எண்ணெய் வித்து பயிர்கள் 2 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவிலும், தோட்டக்கலை பயிர்கள் 5 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவிலும் மற்றும் கரும்பு ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவிலும் சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு தேவையான உரங் கள் தற்சமயம் யூரியா 1338 டன், டி.ஏ.பி. 1635 டன், மியூரேட் ஆப் பொட்டாஷ் 452 டன், கலப்பு உரங்கள் 1204 டன் என மாவட்டத்தில் உள்ள 380 தனியார் உரக்கடைகளிலும், 125 தொ டக்க வேளாண்மை கூட்டு றவு சங்கங்களின் மூலமாக இருப்பு வைத்து விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. யூரியா 50 கிலோ மூட்டையின் விலை ரூ270.50. வேப்பம் சாறு மெருகூட்டப்பட்டது. ரூ284க்கும், டி.ஏ.பி., எம்.சி.எப். கம்பெனியின் விலை ரூ1185க்கும், ஸ்பிக் கம்பெனி ரூ1225க்கும், இந்தி யன் பொட்டாஷ் நிறுவன கம்பெனியின் விலை ரூ1135க்கும், மியூரேட் ஆப் பொட்டாஷ்ரூ800க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. விலை விபரம் அந்தந்த மூட்டையில் அச்சிடப்பட்டுள்ளது. விலைப்பட்டியில் விவசாயிகள் பார்வைக்கு உரக்கடைகளின் முன்னால் வைக்கப்பட வேண்டும். உரங்கள் அனைத்து அதிகபட்ச விற்பனை விலைக்கு (எம்.ஆர்.பி) மிகையாமல் விற்பனை செய்ய

வேண் டும். உரங்கள் விற்கும் போது விவசாயிகளின் கை யொப்பம் பெற்று முழு விலாசத்துடன் ரசீது வழங்க வேண்டும். அனைத்து உரங்களும் தனித்தனியாக இருப்பு கிடங்குகளில் அடுக்கி வைக்க வேண்டும். புகாருக்க இடமளிக்காமல் சேவை மனப்பான்மையுடன் விவசாயிகளுக்கு இடுபொருட்கள் வழங்க வேண்டும். உரக்கட்டுப்பாடு சட்டத்திற்கு உட்பட்டு விற்பனை செய்யவேண்டும். மீறும் பட்சத்தில் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு மாவட்ட கலெக்டர் பேசினார். கூட்டத்தில், வேளாண்மை துணை இயக் குநர் (மாநில திட்டம்) மணி, மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) சுமதி, கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் ராஜேந்திரன், வேளாண்மை உதவி இயக்குநர் (தரக்கட்டுப்பாடு) பச்சியப்பன் மற்றும் வேளாண்மை அலுவலர்கள் பங்கேற்றனர்.

## <u>கால்நடைகளுக்கு குடற்புழு நீக்க முகாம்</u>

விருதுநகர், : கால்நடைகளுக்கு இலவச இனப்பெருக்க மருத்துவ பரிசோதனை மற்றும் குடற்புழு நீக்க மருத்துவ முகாம் நவ.28, 29ம் தேதிகளில் நடைபெறுவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். விலையில்லா கறவைப் பசுக்கள் மற்றும் வெள் ளாடு, செம்மறி ஆடு வழங்கும் திட்டத்தின் கீழ் வறுமைகோட்டிற்கு கீழ் உள்ள பெண்களுக்கு, பயனாளிகளுக்கு 4 ஆடுகளும், கறவை மாடும் வழங்கப்படுகிறது. விருதுநகர் மாவட்டத்தில் இத்திட்டத்தின் கீழ் 1,883 பயனாளிகளுக்கு 1,883 கறவைப் பசுக்கள் வழங்கப்பட்டுள்ளன. 15 ஆயிரத்து 168 பயனாளிகளுக்கு 60 ஆயிரத்து 672 ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன. இலவச ஆடு, மாடுகளை சரியாக பராமரிக்கும் பயனாளிக்கு தமிழ்புத்தாண்டில் பரிசுகள் வழங்கப்படும். கறவை பசுக்களின் பால் உற்பத்தி திறனை பெருக்கவும், ஆடுகளின் எடையை அதிகரிக்கவும் நவ.28 மற்றும் 29ம் தேதிகளில் இனப்பெருக்க

பரிசோதனையும், குடற்புழு நீக்க பரிசோ தனை செய்ய முகாம் நடைபெறுகிறது. இம்முகாமில் அனை த்து விவசாயிகளும் தங்களது கால்நடைகளுக்கு சிகிச்சை பெறலாம்' என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## <u>சம்பா நெற்பயிரில் ஆனைக்கொம்பன் இலை சுருட்டுப்புழு தாக்குதலை கட்டுப்படுத்துவது எப்படி? வேளாண் அதிகாரி யோசனை</u>

அரியலூர் : சம்பா நெற்பயிரில் ஆனைக்கொம்பன் இலை சுருட்டு புழு தாக்குதலை கட்டுப்படுத்த வேளாண் அதிகாரி விவசாயிகளுக்கு யோசனை தெரிவித்துள்ளார். தா.பழூர் வட்டார வேளாண் உதவி இயக்குனர் பழனிசாமி ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது: தா.பழூர் வட்டாரத்தில் சுமார் 5,500 எக்டரில் நெல் சாவித்திரி, பிபிடி 5204 மற்றும் ஆடுதுறை 39 ரகங்கள் அதிக அளவில் பயிரிடப்பட்டுள்ளன. இதில் சாவித்திரி ரகத்தில் இலை சுருட்டுப்புழு தாக்குதல் பரவி வருகிறது. இதனை வரும் முன் தடுக்க சரியான அளவு யூரியாவை வேப்பம்புண்ணாக்குடன் கலந்து வைத்து இட வேண்டும். வயலில் பழைய தண்ணீர் தேங்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். தாக்குதல் வந்த பின்னர் 1 ஏக்கருக்கு புளூபென்டமைடு 39.35% 20மிலி, நிம்பிசிடின் 200 மிலி மற்றும் ஒட்டும் திரவம் காதிசோப்பு அல்லது டீப்பால் கலந்து விசைத்தெளிப்பான் மூலம் 60 லிட்டர் தண்ணீரிலும் இதர தெளிப்பான்கள் மூலம் 200 லிட்டர் தண்ணீரிலும் கலந்து தெளிக்க வேண்டும். மேலும் பிபிடி 5204 ரகத்தில், ஆனைக்கொம்பன் ஈ, இலை சுருட்டுப்புழு மற்றும் குருத்துப்பூச்சி தாக்குதல் பரவி வருகிறது. பிபிடி 5204 ரகத்தில் குறிப்பாக யூரியா சரியான அளவில் வேப்பம் புண்ணாக்குடன் கலந்து தண்ணீர் தேங்காமல் நிர்வாகம் செய்தால் மட்டுமே இந்த தாக்குதலை தடுக்க இயலும். தாக்குதல் வந்த நிலையில், 1 ஏக்கருக்கு காலீர்டாப்ஹைட்ரோகுளோரைடு 400 கிராம் ஒட்டும் திரவத்தில் கலந்து தெளிக்க வேண்டும். பின்னர் 1 வாரம் கழித்து புளூபென்டிமைடு 20 மிலி,

நிம்பிசிடின் 200 மிலி மற்றும் ஒட்டும் திரவம் காதிசோப்பு அல்லது டீப்பால் கலந்து தெளிக்க வேண்டும். மேற்கண்ட வழிமுறைகளை விவசாயிகள் சரியான முறையில் தெளிப்பு செய்தால், பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்தி அதிக மகசூல் பெறலாம் என தா.பழூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் தெரிவித்துள்ளார்.

**<u>கரும்பு சோகையில் உரம் மானிய திட்டத்தில் சேர விவசாயிகள் ஆர்வம்</u>**

ஈரோடு, : கரும்பு சோகையை உரமாக்குவதால் 20 சதவீத கூடுதல் மகசூல் கிடைப்பதோடு அரசின் சார்பில் மானியமும் வழங்கப்படுவதால் இத்திட்டத்தில் சேர விவசாயிகள் ஆர்வம் செலுத்தி வருகின்றனர். கரும்பு பயிரிடும் விவசாயிகள் கரும்பு வெட்டிய பிறகு அதன் சோகையை நிலத்திலேயே பரப்பி விட்டு தீயிட்டு அழித்து வந்தனர். இதன் மூலம் நிலத்திற்கு சாம்பல் சத்து கிடைத்து வருவதாக கருதப்பட்டது. ஆனால் இது நிலத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தி வருவதாக வேளாண்மை துறையினர் கூறினர். குறிப்பாக கரும்பு சோகைகளை தீயிட்டு அழிப்பதால் கார்பன் டை ஆக்ஸைடு காற்றில் கலந்து சுற்றுச்சூழலுக்கு பெரும் பாதிப்பு ஏற்படுத்துவதாகவும், சுற்றுச்சூழல் பாதிப்பினால் மழை பொழிவு இல்லாமல் வறட்சி நிலவி வருவதாகவும் அதிகாரிகள் கூறினர். இப்பிரச்னைக்கு தீர்வு காணும் வகையில் கரும்பு சோகையை வயலிலேயே பொடியாக்கி உரமாக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தின் படி கடந்த ஆண்டில் மாவட்டத்தில் 500 ஹெக்டர் பரப்பளவிலான கரும்பு சோகைகள் வயலில் பொடியாக்கப்பட்டது. இத்திட்டத்தில் சேரும் விவசாயிகளுக்கு மானியமாக ஹெக்டர் ஒன்றுக்கு ரூ. 2400 வீதம் வழங்கப்படுவதாகவும் நடப்பு நிதியாண்டில் இத்திட்டத்தின் கீழ் 500 விவசாயிகள் பயன்பெற வாய்ப்பு உள்ளதாகவும் வேளாண் துறையினர் தெரிவித்துள்ளனர். மேலும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்ட நிலங்களில் 20 சதவீதம் கூடுதல் மகசூல் கிடைத்திருப்பதால் இதில் சேர விவசாயி

களிடையே ஆர்வம் ஏற்பட்டுள்ளதாக வேளாண்துறையினர் கூறினர். ஈரோடு, : கரும்பு சோகையை உரமாக்குவதால் 20 சதவீத கூடுதல் மகசூல் கிடைப்பதோடு அரசின் சார்பில் மானியமும் வழங்கப்படுவதால் இத்திட்டத்தில் சேர விவசாயிகள் ஆர்வம் செலுத்தி வருகின்றனர். கரும்பு பயிரிடும் விவசாயிகள் கரும்பு வெட்டிய பிறகு அதன் சோகையை நிலத்திலேயே பரப்பி விட்டு தீயிட்டு அழித்து வந்தனர். இதன் மூலம் நிலத்திற்கு சாம்பல் சத்து கிடைத்து வருவதாக கருதப்பட்டது. ஆனால் இது நிலத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தி வருவதாக வேளாண்மை துறையினர் கூறினர். குறிப்பாக கரும்பு சோகைகளை தீயிட்டு அழிப்பதால் கார்பன் டை ஆக்ஸைடு காற்றில் கலந்து சுற்றுச்சூழலுக்கு பெரும் பாதிப்பு ஏற்படுத்துவதாகவும், சுற்றுச்சூழல் பாதிப்பினால் மழை பொழிவு இல்லாமல் வறட்சி நிலவி வருவதாகவும் அதிகாரிகள் கூறினர். இப்பிரச்னைக்கு தீர்வு காணும் வகையில் கரும்பு சோகையை வயலிலேயே பொடியாக்கி உரமாக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தின் படி கடந்த ஆண்டில் மாவட்டத்தில் 500 ஹெக்டர் பரப்பளவிலான கரும்பு சோகைகள் வயலில் பொடியாக்கப்பட்டது. இத்திட்டத்தில் சேரும் விவசாயிகளுக்கு மானியமாக ஹெக்டர் ஒன்றுக்கு ரூ. 2400 வீதம் வழங்கப்படுவதாகவும் நடப்பு நிதியாண்டில் இத்திட்டத்தின் கீழ் 500 விவசாயிகள் பயன்பெற வாய்ப்பு உள்ளதாகவும் வேளாண் துறையினர் தெரிவித்துள்ளனர். மேலும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்ட நிலங்களில் 20 சதவீதம் கூடுதல் மகசூல் கிடைத்திருப்பதால் இதில் சேர விவசாயிகளிடையே ஆர்வம் ஏற்பட்டுள்ளதாக வேளாண்துறையினர் கூறினர். சேதுபாவாசத்திரம், : கரும்பு பயிரில் எடையுடன் கூடிய மகசூல் பெற நீர் பாசனம் செய்ய வேண்டிய பருவங்கள் குறித்து விவசாயிகளுக்கு யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் பெரியசாமி வெளியிட்டுள்ள அறிக்கை: கரும்பு பயிர் நிமிர்ந்து நிற்பதற்கும், வெயிலின் தாக்கத்தால் வாடாமல்

இருப்பதற்கும், வேர்மூலம் ஊட்டச்சத்துக்களை எடுத்து கொள்வதற்கும் ஒளிச்சேர்க் கை மூலம் சர்க்கரை மற்றும் மாவுப்பொருட்களை உற்பத்தி செய்வதற்கும், பயிரினுள் நடைபெறும் வேதியியல் மாறுதல்களுக்கும் நீர் முக்கிய பங்கு வகிக்கிறது. வளரும் பயிரின் எடையில் 80 முதல் 85 சதவீதம் வரை நீர் உள்ளது. ஒரு டன் கரும்பு விளைவிக்க 125 டன் நீர் தேவைப் படுகிறது. ஒரு டன் சர்க்கரை உற்பத்தி செய்ய 1,350 டன் நீரை கரும்பு பயிர் எடுத்து கொள்கிறது. ஒருபோக கரும்பு சாகுபடி செய்ய 2000 முதல் 2500 மி.மீ நீர் தேவைப்படுகிறது. ஒரு எக்டேர் பரப்பில் ஒருபோக கரும்பு சாகுபடி செய்ய தேவைப்படும் 2,500 மி.மீ நீரை கொண்டு இருபோக நெற்பயிரையோ அல்லது ஐந்துபோக சோளப்பயிரையோ அல்லது எட்டுபோக கம்பு பயிரையோ பயிரிடலாம். பாசனநீரை பருவத்தை பொருத்து பல்வேறு இடைவெளிகளில் 38 முதல் 40 முறை பாசனம் செய்ய வேண்டும். 1 முதல் 35 வரை நாட்களான முளைப்பு பருவத்தில் 7 நாட்கள் இடைவெளியில் 5 பாசனமும், 36 முதல் 100 நாட்கள் வரையிலான தூர்கட்டும் பருவத்தில் 10 நாட்கள் இடைவெளியில் 5 பாசனமும், 101 முதல் 270 நாட்கள் வரையிலான வளர்ச்சி பருவத்தில் 8 நாட் கள் இடைவெளியில் 21 பாசனமும், 271 முதல் அறு வடை வரையிலான முதிர் ச்சி பருவத்தில் 13 நாட்கள் இடைவெளியில் 6 பாசன மும் என மொத்தம் 38 முறை கரும்புக்கு பாசனம் செய் வதன் மூலம் நீர்ச்சத்து நிறைந்த எடையுடன் கூடிய அதிக சர்க்கரை, பிழிதிறன் கொண்ட கரும்பு நமக்கு மகசூலாக கிடைக்கும். மாவட்டத்துக்கு மொத்தம் 10 ஆயிரம் மெட்ரிக் டன் உரங்கள் வருவது வழக்கம். மாவட்டத்துக்கு மொத்தம் 10 ஆயிரம் மெட்ரிக் டன் உரங்கள் வருவதுவழக்கம்.

**<u>தஞ்சை மாவட்டத்தில் 30ம் தேதி 30 லட்சம் மரக்கன்று நடுவதற்கு திட்டம்</u>**

தஞ்சை, : தஞ்சை மாவட்டத்தில் வரும் 30ம் தேதி ஒரே நாளில் 30 லட்சம் மரக்கன்று நட திட்டமிடப்பட்டுள்ளது. நமது சுற்றுச்சூழல் பாது காப்பு மற்றும் வெப்பம், குளிர் ஆகிய சீதோஷ்ண நிலை மாறுபாடுகளை கட்டுப்படுத்துவதில் காடுகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இந்தியாவின் பரப்பளவை பொறுத்தவரையில் காடு களின் பரப்பளவு 24 சதவீதமாக உள்ளது. தமிழகத்தில் காடுகளின் பரப்பளவு 13 சதவீதமாக உள்ளது. இது இந்தியாவில் காடுகளின் பரப்பளவில் 21வது இடத் தில் உள்ளது. தஞ்சை மாவட்டத்தில் காடுகளின் பரப் பளவு 5.71 சதவீதம் மட்டுமே உள்ளது. இது தமிழக காடுகளின் பரப்பளவில் 30 மாவட்டங்களில் 26வது இடமாகும். எனவே நமது மாவட்டத்தில் பசுமை பரப்பை அதிகப்படுத்தும் நோக்கில் 30 லட்சம் மரக்கன்றுகளை ஒரே நாளில் நட திட்டமிடப்பட்டுள்ளது. இந்த மாபெரும் திட்டத்துக்கு அடிப்படை தேவையான மரக்கன்றுகள் 14 வட்டங்களில் 48 சிற்றூராட்சிகள் மற்றும் தோட்ட கலைத்துறை மூலம் 33 லட்சம் மரக்கன்றுகள் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயம் செய்து கடந்த செப்டம்பர் 19ம் தேதி ஒரே நாளில் விதைகள் விதைக்கப்பட்டு நடுவதற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. இதன்படி தஞ்சை மாநகராட்சி, பட்டுக் கோட்டை, கும்பகோணம் நகராட்சிகள், 22 பேரூராட்சிகள், 14 ஊராட்சி ஒன்றியங்களை சேர்ந்த 589 கிராம ஊராட்சிகளில் வரும் 30ம் தேதி ஒரே நாளில் அனைத்து மரக்கன்றுகளையும் நட திட்டமிடப்பட்டுள்ளது. இந்த மரக்கன்று நடும் திட்டத்தில் மாவட்ட நிர்வாகத்துடன் பொதுமக்களும் தங்களது பங்களிப்பை அளிக்க வேண் டும். மரக்கன்றுகளை தொடர்ந்து பராமரிக்கவும், பாதுகாக்கவும் தங்களது பங்களிப்பை அளிக்கலாம்.

## ரூ.8 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மை திட்டம் தொடக்கம்

ஈரோடு, : ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மை திட்டம் ஈரோடு மாவட்டத்தில் அந்தியூர், அம்மாபேட்டை வட்டாரத்தில் ரூ.8.07 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ளது. இதற்காக பகுப்பாய்வு முகாம் வரும் 1ம் தேதி தொடங்குகிறது. மானாவரி நிலங்களில் நிலவும் நீர் பற்றாக்குறை, நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக குறைவது, மண அரிப்பு,ணீ விலைபொருள் விற்பனை குறைபாடு போன்றவற்றை மேம்படுத்தி நீடித்த நிலையான வேளாண்மை உற்பத்திக்காக ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண் மை திட்டம் 16 நீர்வடிப்பகுதிகளில் செயல்படுத்தப்படுகிறது. அதன்படி ஈரோடு மாவட்டத்தில் இந்த நிதியாண்டில் அந்தியூர், அம்மாபேட்டை வட்டாரத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. ஆயத்த கட்டப்பணிகளாக நீர்வடி மேம்பாட்டு அணி, நீர்வடிப்பகுதி குழு, பயனாளிகள் குழுக்கள் மற்றும் சுயஉதவிக்குழுக்கள் அமைக்கப்பட உள்ளது. இந்த திட்டத்தின் நோக்கங்களை விளக்கும் வகையில் விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள், ஊரக மக்கள் பங்கேற்பு பகுப்பாய்வு முகாம்கள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மை திட்டம் 5 ஆண்டுகள் நடைபெறும். ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மை திட்டம் பகுதி 7ல் அந்தியூர், அம்மாபேட்டை வட்டாரத்தில் 4 ஆயிரத்து 75 எக்டேரில் 8 நீர்வடிப்பகுதிகள் தேர்வு செய்யப்பட்டு ரூ. 4 கோடியே 89 லட்சம் மதிப்பீட்டில் திட்டத்தை செயல்படுத்த உள்ளனர். அதன்படி ஒட்டப்பாளையம் ஊராட்சியில் டிசம்பர் 1ம் தேதியும், பட்லூர் ஊராட்சியில் 2ம் தேதியும், கெட்டிசமுத்திரம் ஊராட்சியில் 3ம் தேதியும், சங்கராபாளையம் ஊராட்சியில் 4ம் தேதியும், மாத்தூர் ஊராட்சியில் 5ம் தேதியும், பிரம்மதேசம் ஊராட்சியில் 6ம் தேதியும், வேம்பத்தி ஊராட்சியில் 7ம் தேதியும் நடைபெற

உள்ளது. ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மை திட்டம் பகுதி 8ல் அந்தியூர், அம்மாபேட்டை ஒன்றியத்தில் 2 ஆயிரத்து 650 எக்டேர் பரப்பளவில் ரூ. 3 கோடியே 18 லட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ளது. அதன்படி எண்ணமங்கலம் ஊராட்சியில் 8 மற்றும் 9ம் தேதிகளிலும், சென்னம்பட்டியில் 10ம் தேதியும், வெள்ளித்திருப்பூரில் 11ம் தேதியும் நடைபெற உள்ளது. இந்த திட்டத்தின் பயன்கள், பணிகள், பங்கேற்புகள் குறித்து செயல்விளக்கம், விழிப்புணர்வு கலைநிகழ்ச்சிகள் மூலமாக விளக்கமளிக்கப்பட உள்ளது. இதனை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ளுமாறு கலெக்டர் பிரபாகரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

**கேரளாவில் பறவை காய்ச்சல் எதிரொலி கூடலூர், பந்தலூர் சோதனை சாவடிகளில் தீவிர கண்காணிப்பு**

பந்தலூர், : கேரள மாநிலம் ஆலபுலா மாவட்டத்தில் பறவை காய்ச்சல் ஏற்பட்டு பல ஆயிரக்கணக்கான வாத்துகள் பலியானதை தொடர்ந்து, தமிழகத்தில் நீலகிரி மாவட்டம் கூடலூர், பந்தலூர் பகுதிகளில் உள்ள சோதனை சாவடிகளில் தீவிர கண்காணிப்பு பணியில் போலீசார், வருவாய்த்துறை, வனத்துறை, கால்நடை பராமரிப்பு துறையினர் ஈடுபட்டு வருகின்றனர். நாடுகாணி, கக்கநல்லா, பாட்டாவயல், சோலாடி, தாளூர், கக்குன்டி, நம்பியார்குன்னு போன்ற சோதனை சாவடிகளின் வழியாக கேரளாவிலிருந்து வரக்கூடிய வாகனங்களுக்கு கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் கூடலூர் கோட்ட உதவி இயக்குநர் தயாள்சேகர் தலைமையில் சோடியம் டை ஆக்சைடு, பொட்டாசியம் பெர் மாங்கனேட் மருந்துகளை டயர்களில் தெளிக்கும் பணியில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர். தொடர்ந்து பந்தலூர் பகுதியிலுள்ள கோழி விற்பனை நிலையங்கள், கோழி பண்ணை களில் தீவிர சோதனையில் ஈடுபட்டு கேரளாவிலிருந்து கொண்டு வரப்பட்ட கோழிகள் மற்றும் முட்டை களை விற்பனை செய்ய கூடாதென அதிகாரிகள்

எச்சரித்து வருகின்றனர். தொடர்ந்து கால்நடை மருத்துவர்கள் மங்கம்மாள், பிரபு, காளியப்பன் ஆகி யோர் அடங்கிய மருத்துவ குழுவினர் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

## <u>தா.பழூர் விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு 6 மூட்டை யூரியா வழங்க வேண்டும்</u>

அரியலூர், : தா.பழூர் விவசாயிகளுக்கு, தங்கு தடையில்லாமல் ஒரு ஏக்கருக்கு 6 மூட்டை யூரியா உரம் வழங்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அரியலூர் மாவட்டம் தா.பழூர் ஒன்றிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் செயற்குழு கூட்டம் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் உலகநாதன் பேசியதாவது: அரியலூர் மாவட்டம் டெல்டா மாவட்டம் என அறிவிக்கப்பட்டு வருகிறது. ஆனால் தஞ்சை, நாகை, திருவாரூர் போன்ற டெல்டா மாவட்டங்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் அனைத்தும் புறக்கணிக்கப்பட்டு வருவது வாடிக்கையாகி விட்டது. தமிழகத்தில் உரத்தட்டுப்பாடு கடுமையாக நிலவி வருகிறது. அதிலும் எந்த ஆண்டும் இல்லாத அளவில், அரியலூர் மாவட்டத்தில் கடும் யூரியா உரத்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் விவசாயிகள் காலை முதல் மாலை வரை மணிக்கணக்கில் நின்று ஒரு மூட்டைதான் பெற முடிகிறது. அந்த ஒரு மூட்டை கூட சிலருக்கு கிடைக்காமல் காலதாமதமாக வாங்கும் சூழ்நிலை உள்ளது. ஒரு ஏக்கருக்கு 6 மூட்டை யூரியா தேவைப்படும் நிலையில், ஒரு மூட்டை வைத்து விவசாயி என்ன செய்ய முடியும். மாவட்ட நிர்வாகம் இதுகுறித்து கவனம் செலுத்தாதது டெல்டா விவசாயிகளுக்கு வேதனை அளிக்கிறது என்றார். கூட்டத்தில் தா.பழூர் டெல்டா விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு 6 மூட்டை யூரியா வழங்க வேண்டும், சீனாவில் இறக்குமதி செய்யப்பட்ட உரம் நம்

மாவட்டத்திற்கும் கிடைக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். பொன்னாற்று பாசனத்தில் தண்ணீர் தேவையான அளவில் வராததால், பயிரிட முடியாத தரிசு நில விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ. 15 ஆயிரம் வழங்க வேண்டும். அரியலூரில் இருந்து வி.கைகாட்டி வழியாக கும்பகோணம் செல்வதற்கு கல்லூரி நேரத்தில் பஸ் வசதி வேண்டும் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்தில், ஒன்றிய செயலாளர் அபிமன்னன், ரெங்கநாதன், ஒன்றிய குழு நிர்வாகிகள் செம்பையன், ராமயைன், தங்கவேல், ராஜமாணிக்கம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>கேரளாவில் நோய் தாக்கிய 4 லட்சம் வாத்து, கோழிகள் அழிப்பு: தமிழ்நாட்டுக்குள் பறவை காய்ச்சல் பரவாமல் தடுக்க நடவடிக்கை</u>**



நாமக்கல், கேரள மாநிலம் ஆலப்புழை மாவட்டத்தில் உள்ள வாத்து பண்ணைகளில் பறவை காய்ச்சல் நோய் கிருமிகள் தாக்கி ஆயிரக்கணக்கான வாத்துகள் செத்தன. 4 லட்சம் வாத்து, கோழிகள் அழிப்பு பறவை காய்ச்சல் மேலும் பரவாமல் தடுக்க, இந்த நோய் பாதித்த வாத்துகள் மற்றும் கோழிகளை தீ வைத்து அழிக்க கேரள அரசு நடவடிக்கை எடுத்து உள்ளது. மொத்தம் 4 லட்சம் வாத்து மற்றும் கோழிகளை தீ வைத்து அழிக்க தீர்மானிக்கப்பட்டு உள்ளது. இதற்கான நடவடிக்கையை அந்த மாநில சுகாதார துறையினர் செய்து வருகின்றனர். அதன்படி இதுவரை 20

ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாத்து, கோழிகள் அழிக்கப்பட்டு உள்ளன.

## தமிழகஅரசுநடவடிக்கை

பறவை காய்ச்சல் நோய் கேரளாவில் இருந்து தமிழ்நாட்டுக்குள் பரவி விடாமல் தடுக்க தமிழக அரசு உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து இருக்கிறது. இதுதொடர்பாக உயர் அதிகாரிகளுடன் முதல்-அமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் நேற்று முன்தினம் ஆலோசனை நடத்தினார். இந்த ஆலோசனை கூட்டத்தில், கேரளாவில் இருந்து தமிழ்நாட்டுக்கு வரும் வாகனங்கள் மீது தெளிப்பான்கள் மூலம் கிருமிநாசினி மருந்து தெளிப்பது உள்ளிட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டது. மேலும் கேரளாவில் இருந்து கோழிகள் கொண்டு வர தமிழக அரசு தடை விதித்து உள்ளது.

## சோதனைச்சாவடிகளில்கண்காணிப்பு

கேரளாவில் பறவை காய்ச்சல் பரவி வருவதையொட்டி, கன்னியாகுமரி மாவட்டத்தில் கேரள-தமிழக எல்லையான களியக்காவிளை சோதனைச்சாவடியில் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டு உள்ளது. அங்கு ஒரு கால்நடை ஆய்வாளர் மற்றும் கால்நடை பராமரிப்பு உதவியாளர் ஆகியோர் களியக்காவிளை கால்நடை மருந்தக டாக்டர் செல்வின்ஜோஸ் மேற்பார்வையில் 24 மணிநேரமும் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். கேரளாவில் இருந்து குமரி மாவட்டத்திற்கு வரும் வாகனங்களின் டயர்களில் தெளிப்பான் மூலம் கிருமிநாசினி மருந்து தெளிக்கப்படுகிறது. கேரளாவில் இருந்து கோழிகள், முட்டைகள், கோழித்தீவனங்கள் மற்றும் கோழிப்பண்ணை உபகரணங்களை குமரி மாவட்டத்திற்கு கொண்டு வர தடைவிதிக்கப்பட்டு உள்ளது.

## மாவட்டகலெக்டர்ஆய்வு

தமிழகத்தில் இருந்து கேரளாவுக்கு முட்டை, கோழிதீவனங்கள் போன்றவற்றை ஏற்றி செல்லும் வாகனங்கள் பறவைக்காய்ச்சல் இல்லை என்ற சான்றிதழ் வைத்திருந்தால் மட்டுமே கேரளாவுக்குள் அனுமதிக்கப் படுகின்றன. இந்த சோதனைச்சாவடியை மாவட்ட கலெக்டர் சஜ்ஜன்

சவான் நேற்று நேரில் ஆய்வு செய்தார். குமரி மாவட்டத்தில் கோழிப்பண்ணை யாளர்கள் மற்றும் வீடுகளில் கோழிவளர்ப்பவர்கள், கோழிகளின் ஆரோக்கியத்தில் ஏதேனும் மாற்றம் ஏற்பட்டாலோ அல்லது கோழிகள் இறந்தாலோ உடனடியாக அருகில் உள்ள கால்நடை மருந்தக கால்நடை உதவி மருத்துவர்களின் கவனத்திற்கு கொண்டு வருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டு உள்ளனர். கிருமி நாசினி மருந்து தெளிப்பு பறவை காய்ச்சல் நோய் எதிரொலியாக ஓசூர் அருகே கால்நடை துறை சார்பில் சோதனைச்சாவடி அமைக்கப்பட்டு, கர்நாடகம் மற்றும் வெளிமாநிலங்களில் இருந்து கோழிகள் மற்றும் கோழித்தீவனங்கள் ஏற்றி வரும் லாரிகள் கண்காணிக்கப்படுகின்றன. அந்த லாரிகள் மீது கிருமிநாசினி மருந்து தெளிக்கப்படுகிறது. மேலும் தமிழகத்தில் இருந்து கேரளாவுக்கு முட்டை மற்றும் கோழி ஏற்றிச்செல்லும் அனைத்து வாகனங்களும் கிருமிநாசினி தெளித்த பின்னரே அனுப்பி வைக்கப்படுகின்றன.
நாமக்கல்கோழிப்பண்ணைகள்
இதற்கிடையே நாமக்கல் கோழிப்பண்ணைகளில் முன்எச்சரிக்கை நடவடிக்கையாக, பண்ணைகளில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு உள்ளன. ஒரு பண்ணையில் இருந்து மற்றொரு பண்ணைக்கு தொழிலாளர்கள் செல்லக்கூடாது என அறிவுறுத்தப்பட்டு உள்ளது. மேலும் பண்ணைகளிலும் வாகனங்களுக்கு சக்கரங்களில் மருந்து தெளிக்கப்படுகிறது. ஒருசில பண்ணைகளில் வாகனங்கள் முழுமையாக கிருமிநாசினி தெளிக்கப்பட்ட பின்னரே அனுமதிக்கப்படுகின்றன. மாவட்ட நிர்வாகம் கால்நடை டாக்டர்கள் அடங்கிய 20 கண்காணிப்பு குழுக்களை அமைத்து உள்ளது.
முட்டைகள் தேங்கும் அபாயம் தற்போது பறவை காய்ச்சல் தாக்கி உள்ள கேரள மாநிலம், தமிழகத்தின் முக்கிய விற்பனை ஸ்தலம் ஆகும். சாதாரண நாட்களில் தமிழகத்தில் இருந்து கேரளாவுக்கு 1 கோடிக்கும் மேல் முட்டைகள் விற்பனைக்கு கொண்டு செல்லப்படும். தற்போது கேரளாவில்

முட்டை மற்றும் கோழி விற்பனை சரிவடைய தொடங்கி உள்ளதால், நாமக் கல் மண்டலத்தில் இருந்து செல்லும் முட்டைகளின் அளவு குறைய தொடங்கி இருப்பதாக கூறப்படுகிறது. இதனால் முட்டைகள் தேங்கும் அபாயம் உள்ளது. இந்த நிலையில் இது தொடர்பாக ஆலோசிக்க தமிழ்நாடு கோழிப்பண்ணை யாளர்கள் சங்கத்தின் நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நேற்று நாமக்கல்லில் நடந்தது. இந்த கூட்டத்திற்கு பின்னர் சங்க தலைவர் நல்லதம்பி நிருபர்களிடம் கூறியதாவது:- பாதிப்பு இல்லை

கேரள மாநில வாத்து பண்ணையில் ஏற்பட்ட பறவை காய்ச்சலால் தமிழ்நாடு கோழிப்பண்ணைகளுக்கு எந்த பாதிப்பும் இல்லை. முட்டை தேக்கம் எதுவும் இல்லை. எனவே பொதுமக்கள் முட்டைகள், கோழிக் கறி சாப்பிட அச்சப்பட தேவையில்லை. கேரளாவிற்கு தினசரி 1 கோடியே 40 லட்சம் முட்டைகள் விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன. விற்பனையில் எந்த பாதிப்பும் இல்லை. கேரள மக்கள் 10 சதவீதம் வாத்து முட்டைகளை இதுநாள் வரை உபயோகித்து வந்தனர். தற்சமயம் வாத்து முட்டைகள் இல்லாததால், வரும் வாரங்களில் கோழி முட்டை விற்பனை மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. கேரள வாத்து பண்ணையில் ஏற்பட்ட பறவை காய்ச்சலால் எல்லா சோதனை சாவடிகளிலும், தமிழகத்திற்குள் வரும் வண்டிகளுக்கு கிருமி நாசினி மருந்து தெளித்து நோய் பரவாமல் தடுக்க தமிழக அரசு கண்காணித்து வருகிறது. எனவே பண்ணையாளர்கள் மேலும் விழிப்புணர்வோடு பண்ணைகளை நடத்திட வேண்டும். இவ்வாறு நல்லதம்பிகூறினார்.

கண்காணிப்பு

இந்தநிலையில் கால்நடை பராமரிப்பு துறையினரால் வழங்கப்பட்ட அறிவுரைகள் முறையாக பண்ணையாளர்களால் பின்பற்றப்படுகின்றனவா? என கண்டறிய மாவட்ட கலெக்டர் தட்சிணாமூர்த்தி மற்றும் நாமக்கல் கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் சக்திவேல்,

நாமக்கல் மருத்துவப்பணிகள் துணை இயக்குநர் டாக்டர் ஜெமினி உள்ளிட்டோர் அடங்கிய குழுவினர் கீரம்பூர் மற்றும் செங்கப்பள்ளி ஆகிய பகுதிகளில் உள்ள கோழிப்பண்ணைகளில் திடீர் ஆய்வு மேற்கொண்டனர். காவிரி கரையோர பகுதிகளில் உள்ள வாத்து பண்ணைகளையும் கால்நடை துறையினர் கண்காணித்து வருகின்றனர்.

## பறவை காய்ச்சல் நோய் எதிரொலி: கேரளாவில் 1300 வாத்துகள் தீ வைத்து எரிப்பு தமிழக எல்லையில் தீவிர கண்காணிப்பு



கேரளாவில் பறவை காய்ச்சல் நோய் எதிரொலியாக 1300 வாத்துகள் தீ வைத்து எரிக்கப்பட்டன. கேரளாவில் இருந்து தமிழகத்திற்கு கோழிகள் ஏற்றி வந்த லாரிகள் திருப்பி அனுப்பப்பட்டன. பறவை காய்ச்சல் கேரளாவில் ஆலப்புழா, கோட்டயம் உள்ளிட்ட சில மாவட்டங்களில் பறவை பண்ணைகளில் வளர்க்கப்பட்ட சில வாத்துகள் திடீர், திடீரென செத்து விழுந்தன. இறந்த வாத்துகளை பரிசோதித்த போது, அவற்றிற்கு எச்.–5 ஏவியன் இன்புளுயன்சா வைரஸ் எனப்படும் பறவை காய்ச்சல் நோய் தாக்கி இருப்பது தெரிய வந்தது. இந்த தகவல் அறிந்ததும் கேரள முதல்–மந்திரி உம்மன்சாண்டி, கால்நடைத்துறை அதிகாரிகளுடன் அவசர ஆலோசனை நடத்தினார். உடனே பறவை காய்ச்சல் நோயால் பாதிக்கப்பட்ட வாத்துக்களை தீ வைத்து எரித்து அழிக்க அவர் உத்தரவிட்டார். தீ வைத்து எரிப்பு

இதை தொடர்ந்து கோட்டயத்தில் 1000 வாத்துகளும், பத்தினம்திட்டாவில் 200, ஆலப்புழையில் 100 என மொத்தம் 1300 வாத்துக்கள் பண்ணைகளில் இருந்து அகற்றப்பட்டு ஊருக்கு வெளியே தீ வைத்து எரிக்கப்பட்டன. அதோடு நோய் பரவாமல் இருக்க கோழி, வாத்து பண்ணைகளில் கிருமி

நாசினி மருந்து தெளிக்கப்பட்டன. அதே போல் பறவை காய்ச்சல் மற்ற மாவட்டங்களுக்கும் பரவாமல் இருக்க தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பறவை காய்ச்சலால் எரித்து கொல்லப்பட்ட வாத்துகளை வளர்த்த பண்ணையாளர்களுக்கு மாநில அரசு சார்பில் நஷ்ட ஈடு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. தமிழக எல்லையில் தீவிர கண்காணிப்பு இதற்கிடையே கேரளாவில் பன்றி காய்ச்சல் நோய் பரவி இருப்பது தெரிய வந்ததும் தமிழகத்தில் நேற்று முன்தினம் முதல் அனைத்து சோதனைசாவடிகளிலும் கால்நடை பராமரிப்பு துறையினர் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டனர். நேற்று 2–வது நாளாக தமிழக–கேரள எல்லையில் தீவிர சோதனையில் ஈடுபட்டனர். கோவை மாவட்டம் பொள்ளாச்சி அருகே உள்ள தமிழக–கேரள எல்லை சோதனை சாவடியில் போலீ சார், கால்நடைத்துறை மருத்துவகுழுவினர் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். கேரளாவில் இருந்து வரும் வாகனங்கள் அனைத்தும் தீவிர சோதனைக்கு பிறகே தமிழகத்திற்குள் செல்ல அனுமதிக்கப்பட்டது. கால்நடைத்துறை உதவி இயக்குனர் நாகராஜ் ஒவ்வொரு சோதனை சாவடிக்கும் சென்று பார்வையிட்டு ஆய்வு நடத்தினார். அப்போது கேரளாவில் இருந்து கோழிகள், முட்டைகள் மற்றும் தீவனங்கள் உள்பட கோழி சம்பந்தப்பட்ட அனைத்து பொருட்களை ஏற்றி வந்த லாரிகள் திருப்பி அனுப்பப்பட்டன. மேலும் கேரளாவில் இருந்து வரும் அனைத்து வாகனங்களுக்கும் கிருமி நாசினி மருந்து தெளிக்கப் பட்டது. தமிழகத்தில் இருந்து முட்டைகள் ஏற்றிக்கொண்டு செல்லும் லாரிகள் மட்டும் செல்ல அனு மதிக்கப்பட்டன. ஆனால் ஒரு சில லாரிகளை கேரள அதிகாரிகள் எல்லையில் தடுத்து நிறுத்தினார்கள். 10 சோதனை சாவடிகளில் இதுகுறித்து கோவை மாவட்ட கால்நடைத்துறை அதிகாரிகள் கூறியதாவது:–

தமிழகத்தில் பறவை காய்ச்சல் இல்லை. இருந்தாலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அனைத்து சோதனை சாவடிகளிலும் வாகனங்கள்

தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகிறது. பொள்ளாச்சி பகுதியில் உள்ள மீனாட்சிபுரம், செமனாம்பதி, கோபாலபுரம், ராமபட்டிணம், வீரப்பகவுண் டனூர், ஜமீன் காளியாபுரம், நடுப்புணி, வளந்தாயமரம் உள்பட 10 சோதனைசாவடிகளிலும் ஒரு கால்நடைத்துறை டாக்டர், ஒரு ஆய்வாளர், 2 உதவி அலுவலர்கள் உள்பட 4 பேர் கொண்ட குழுவினர் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். கேரளாவில் இருந்து வரும் அனைத்து சரக்கு வாகனங்களுக்கும் கிருமி நாசினி மருந்து தெளிக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு அவர்கள் கூறினார்கள். பொள்ளாச்சி பகுதியில் இருந்து தினமும் 30 லாரிகளில் கேரளாவுக்கு கறிக்கோழிகள் கொண்டு செல்லப்படுகிறது. இந்த தடை உத்தரவு காரண மாக சுமார் ஒரு லட்சம் கோழிகள் தேக்கம் அடைந்து உள்ளதாக கறிக்கோழி உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர்.

கூடலூர்

இதே போல நீலகிரி மாவட்டத்தில் கேரள எல்லையான நேற்று 2–வது நாளாக கூட லூர் நாடுகாணி, பாட்டவயல், தாளூர், சோலாடி, கக்குண்டி, கக்கநல்லா, நம்பியார்குன்னு ஆகிய மாநில எல்லைகளில் உள்ள சோதனைச் சாவடிக ளில் கூடலூர் கால்நடை பரா மரிப்புத்துறை உதவி இயக்குநர் தயாசேகர் தலைமையிலான மருத்துவ குழுவினர் முகா மிட்டு கேரளாவில் இருந்து வரும் அனைத்து வாகனங்க ளின் சக்கரங்களுக்கு கிருமி நாசினியை தெளிப்பான்கள் மூலம் தெளித்து வருகின்றனர். மேலும் சாலையின் குறுக்கே மருந்து பவுடர்களை தூவினர். இதே போல் கூடலூர், பந்த லூர் தாலுகா பகுதியில் உள்ள இறைச்சி கோழிக்கடைகளில் உள்ள கோழிகளை பிடித்து மருத்துவ குழுவினர் பரிசோதித்தனர். பண்ணையில் ஆய்வு இதேபோல் பந்தலூர்அருகே உள்ள குந்தலாடியில் உள்ள தனியார் கோழிப்பண்ணை யில் கால்நடை பராமரிப்பு துறை உதவி இயக்குநர் தயா சேகர் சோதனை நடத்தி னார். அப்போது அவர் கூறியதா வது:– 2 24 மணி நேரமும் கிருமி நாசினி தெளிக்கப்படும். தமிழகத்தில் பறவை காய்ச்

சல் வருவதற்கான அறிகுறிகள் இல்லை. இருப்பினும் அனைத்து விதமான முன் னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளது. கூடலூர், பந்தலூர் தாலுகா வில் உள்ள கோழி இறைச்சி கடைகளில் தணிக்கை செய் யப்பட்டது. இதேபோல் குந்த லாடி பகுதியில் உள்ள கோழிப் பண்ணையிலும் ஆய்வு செய் யப்பட்டது. வழக்கத்துக்கு மாறாக கோழிகள் சோர்வ டைந்து காணப்பட்டால் உட னடியாக கால்நடை பராம ரிப்பு துறைக்கு தகவல்கொடுக்க வேண்டும் என கேட்டு கொண் டுள்ளோம். மேலும் கேரள எல்லைகளில் 24 மணிநேரமும் கிருமி நாசினி தெளிக்கும்வகை யில் 20 பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டு உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## விழிப்புணர்வு பயிற்சி முகாமில் விவசாயிகளுக்கு சான்றிதழ்கள் கலெக்டர் வழங்கினார்



அரியலூர், அரியலூர் அருகே நடந்த விழிப்புணர்வு பயிற்சி முகாமில் விவசாயிகளுக்கு சான்றிதழ்களை கலெக்டர் சரவணவேல்ராஜ் வழங்கினார்.

### பயிற்சி முகாம்

அரியலூர் மாவட்டம் திருமானூர் ஊராட்சி ஒன்றியம் திருமழப்பாடியில் மத்திய சேமிப்பு கிடங்கு நிறுவனத்தின் மண்டல அலுவலகம் சார்பில் விவசாயிகளுக்கான அறுவடைக்கு பிந்தைய தொழில்நுட்பம் குறித்த இரண்டு நாள் விழிப்புணர்வு பயிற்சி முகாம் நடந்தது. முகாமில் கலெக்டர் சரவணவேல்ராஜ் கலந்து கொண்டு பயிற்சி முகாமில் பங்கேற்ற 150 விவசாயிகளுக்கு சான்றிதழ்களையும் மற்றும் மத்திய சேமிப்பு கிடங்கு நிறுவனத்தின் சார்பாக 1.5 குவிண்டால் கொள்ளளவு உலோக குதிர்களையும் வழங்கி பேசினார். அவர் பேசியதாவது:-

விற்பனை வாய்ப்புகள்

இந்த பயிற்சி முகாமில் விவசாயிகள் மத்திய சேமிப்பு கிடங்கில் தங்கள் விளைபொருட்களை சேமிப்பதன் மூலம் பூச்சி மற்றும் எலி தொல்லைகளால் ஏற்படும் இழப்பீடுகள் குறைவது குறித்தும், விளைபொருட்கள் குறைந்த விலையில் விற்பது தவிர்ப்பது குறித்தும் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. மேலும், இருப்பு வைக்கும்பொழுது மாற்றத்தக்க கிடங்கு ரசீது மூலம் விவசாயிகள் வங்கிகளில் கடன் பெறுதல் மற்றும் ரசீதுகள் மூலம் விற்பனை வாய்ப்புகள் குறித்தும் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் பேசினார்.

முகாமில் கலந்துகொண்ட விவசாயிகளை தஞ்சை மத்திய சேமிப்பு கிடங்கு நிறுவனத்திற்கு அழைத்துச்சென்று நேரடி பயிற்சியும், விளக்கமும் அளிக்கப்பட்டது. முகாமில் மத்திய சேமிப்பு கிடங்கின் சென்னை மண்டல மேலாளர் சங்கர், சென்னை மத்திய சேமிப்பு கிடங்கு ஆய்வு அலுவலர் கருணாகரன், தஞ்சை சேமிப்பு கிடங்கு மேலாளர் முத்துசாமி, வட்டார வளர்ச்சி அலுவலர் ராஜேந்திரன், ஊராட்சி தலைவர் கர்ணன் மற்றும் வேளாண்துறை அலுவலர்கள்,விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

**பெருந்துறை வேளாண்மை கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ரூ.50 லட்சத்துக்கு கொப்பரை தேங்காய் ஏலம்**



பெருந்துறை வேளாண்மை கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ரூ.50 லட்சத்துக்கு கொப்பரை தேங்காய் ஏலம் போனது.

கொப்பரை தேங்காய் ஏலம்

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் கொப்பரை தேங்காய் ஏலம் நடைபெற்றது. இந்த ஏலத்துக்கு பெருந்துறை, திங்களூர், காஞ்சிக்கோவில், அந்தியூர், கிருஷ்ணகிரி, சென்னிமலை, வெள்ளோடு ஆகிய பகுதிகளில் இருந்து உற்பத்தியாளர்கள் 1,394 மூட்டைகளில் 66 ஆயிரம் கிலோ எடைகொண்ட கொப்பரை தேங்காய்களை கொண்டு வந்தனர். இதில் முதல் தரம் கொப்பரை தேங்காய் கிலோ ஒன்றுக்கு குறைந்தபட்ச விலையாக 73 ரூபாய் 50 காசுக்கும், அதிகபட்ச விலையாக ரூ.79–க்கு ஏலம் போனது.

ரூ.50 லட்சத்துக்கு விற்பனை

2–ம் தரம் கொப்பரை தேங்காய் குறைந்தபட்ச விலையாக 47 ரூபாய் 15 காசுக்கும், அதிகபட்ச விலையாக 71 ரூபாய் 90 காசுக்கும் ஏலம் போனது. ஆக மொத்தம் கொப்பரை தேங்காய் ரூ.50 லட்சத்துக்கு விற்பனை ஆனது. பல்வேறு பகுதிகளில் இருந்து வந்தவர்கள் கொப்பரை தேங்காய்யை ஏலம் எடுத்துச்சென்றனர். கடந்த சனிக்கிழமை நடந்த ஏலத்தை விட கொப்பரை தேங்காய் ரூ.15 குறைந்து விற்பனை ஆனது.

**வேளாண்மை வளர்ச்சி திட்டப்பணிகள் ஆய்வு**



மதுரை மாவட்டம் வாடிப்பட்டி வேளாண்மை கோட்டம் விராலிப்பட்டி, சாணாம்பட்டி, தென்கரை, அயன்தென்கரை, சாலாட்சிபுரம், குருவித்துறை, சோழவந்தான் ஆகிய பகுதியில் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் ஏ.ஜெ.ஜெயசிங் ஞானதுரை ஆய்வு செய்தார். விராலிப்பட்டியில் விவசாயி

குருசாமி வயலில் துவரைக்கான பாலிதீன் பை நாற்றாங்கால், சாணாம்பட்டியில் விவசாயி அய்யங்காளை வயலில் ஒரு ஹெக்டேரில் அமைக்கப்பட்டிருந்த நெல் நடவு ஏடிடி (ஆர்)45 விதைப்பண்ணை, தென்கரையில் விவசாயி குருசாமி வயலில் 2 ஹெக்டேரில் அமைக்கப்பட்ட நெல்நடவு வரப்பில் துவரை சாகுபடி, அயன்தென்கரையில் விவசாயி ராஜாங்கம் வயலில் 2 ஹெக்டேரில் நெல் ஏடிடி (2) 45 விதைப்பண்ணை, சாலாட்சிபுரத்தில் விவசாயி தனுஷ்கோடி வயலில் அரசு மானியத்தில் அமைக்கப்பட்ட திறந்தவெளி சூரிய மின் மோட்டார் ஆகியவற்றை பார்வையிட்டார். குருவித்துறையில் விவசாயி பஞ்சம் வயலில் தென்னை செயல்விளக்க திடல், சோழவந்தான் விதை சுத்திகரிப்பு நிலையத்தில் புதிய விதை சுத்திகரிப்பு இயந்திரம், பருத்தியில் பஞ்சு நீக்கம் செய்யும் இயந்திரம் அமைப்பது குறித்து ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது வாடிப்பட்டி வேளாண்மை உதவி இயக்குநர் ப.ராமநாதன், வேளாண்மை அலுவலர்கள் மயில், மார்க்கண்டன், உதவி விதை அலுவலர் அழகுராஜா, உதவி வேளாண்மை அலுவலர்கள் நடேஷ்குமார், முத்துபாண்டியன், தங்கையா, கந்தசாமி ஆகியோர் இருந்தனர்.

**<u>பில்லாளி ஊராட்சியில் 50 பயனாளிகளுக்கு விலையில்லா கறவை மாடு அமைச்சர் ஜெயபால் வழங்கினார்</u>**



திட்டச்சேரி, திட்டச்சேரியை அடுத்த பில்லாளி ஊராட்சியில் 50 பயனாளிகளுக்கு விலையில்லாகறவை மாடுகளை அமைச்சர் ஜெயபால் வழங்கினார்.

விலையில்லா கறவைமாடு நாகை மாவட்டம், திட்டச்சேரியை அடுத்த

பில்லாளி ஊராட்சியில் தமிழக முதல்-அமைச்சரின் சிறப்பு திட்டங்களின் கீழ் கால்நடை பராமரிப்பு துறை சார்பில் விலையில்லா கறவை மாடுகள் வழங்கும் விழா நடைபெற்றது. விழாவிற்கு கலெக்டர் முனுசாமி தலைமை தாங்கினார். மாநில தலைமை கூட்டுறவு வங்கி தலைவர் ஆசைமணி, ஒன்றியக்குழு துணைத்தலைவர் ராதாகிருட்டிணன், ஒன்றியக்குழு தலைவர் மைதிலிராஜேஸ்குமார், மாவட்ட வருவாய் அலுவலர் பெஞ்சமின்பாபு ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழாவில் அமைச்சர் ஜெயபால் கலந்து கொண்டு 50 பயனாளிகளுக்கு விலையில்லா கறவை மாடுகளை வழங்கி பேசினார். அப்போது அவர் கூறியதாவது:- தமிழக அரசு மக்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறது. விலையில்லா அரிசி, முதியோர் உதவித்தொகை உள்பட பல்வேறு உதவித்தொகை உயர்வு, ஏழை பெண்களின் திருமணத்திற்கு திருமண உதவித்தொகையுடன் திருமாங்கல்யம் செய்ய 4 கிராம் தங்கம், விதவை மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு விலையில்லா கறவை மாடுகள், வெள்ளாடுகள், இல்லத்தரசிகளுக்கு விலையில்லா மிக்சி, கிரைண்டர், மின்விசிறிகள், மாணவ, மாணவிகளுக்கு பென்சில் முதல் மடிக்கணினி வரை என பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. நாட்டு கோழி பண்ணை இந்த திட்டங்கள் அனைத்தும் தகுதி உடைய பயனாளிகளுக்கு சென்றடைய வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு பயனாளிகள் கிராமசபை கூட்டத்தில் தேர்வு செய்யப்படுகிறார்கள். பயனாளிகள் கறவை மாடுகளையும், வெள்ளாடுகளையும் நன்றாக பராமரித்து பாதுகாத்து வருவார்களேயானால், 2 வருடத்தில் ஒரு பெரிய தொகை உங்கள் கையில் இருக்கும். அதேபோல் நாட்டு கோழி பண்ணை அமைக்க ஒரு பயனாளிக்கு 50 சதவீத மானியத்தில் ரூ.1 லட்சத்து 17 ஆயிரம் மதிப்பீட்டில் கோழி கொட்டகை, குஞ்சு மற்றும் தீவனம், உபகரணங்கள் வாங்கிட வழங்கப்படுகிறது.

அடிப்படை வசதிகள் அரசின் திட்டங்களை பெறும் பயனாளிகள் அதன் மூலம் வருமானத்தை பெருக்கி கொள்வதோடு, குழந்தைகளையும் நன்றாக படிக்க வைக்க வேண்டும். பில்லாளி ஊராட்சிக்கு சாலைவசதி, அங்கன்வாடி கட்டிடம், பள்ளி வகுப்பறை கட்டிடம், பஸ் வசதி என இப்பகுதிக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார். விழாவில் உதவி கலெக்டர் சிவப்பிரியா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கலையரசன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் கலியபெருமாள், ஒன்றியக்குழுஉறுப்பினர் சந்திரகலா கிருஷ்ணமூர்த்தி, ஊராட்சி மன்ற தலைவர்கள் முத்துக்குமார் (பில்லாளி), சுல்தான்அரீப் (வடகரை), கூட்டுறவு சங்க தலைவர்கள் திருமேனி, ஆதிநாராயணன், கூட்டுறவு சங்க இயக்குனர் கார்த்திகேயன் உள்பட பலர் கலந்து கொண்டனர். முன்னதாக கால்நடை பராமரிப்பு துறை மண்டல இணை இயக்குனர் நாகராஜன் வரவேற்றார். முடிவில் கால்நடை பராமரிப்பு துறை உதவி இயக்குனர் அருணாச்சலகனி நன்றி கூறினார்.

## <u>நெல்லையில் மூலிகைத் தாவர கண்காட்சி</u>



நெல்லை மாவட்ட அறிவியல் மையத்தில் மூலிகைத்தாவர கண்காட்சி மற்றும் போட்டி வருகிற டிசம்பர் மாதம் 13, 14 ஆகிய தேதிகளில் நடக்கிறது. இதில் பங்கு பெறுவோர் தங்களுடைய 5 மூலிகைத்தாவரங்களை அதன் தொட்டியுடன் காட்சிக்கு வைக்கலாம். அவர்கள் அதன் மருத்துவ குணம் குறித்து விளக்கம் அளிக்கவேண்டும். அரிய, அதிக மருத்துவகுணமுள்ள மூலிகை தாவரங்களை காட்சிக்கு வைப்பவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும். பங்கேற்ற அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்படும். இதில் கலந்து கொள்ள

விரும்புபவர்கள் வருகிற 11–ந்தேதிக்குள் பதிவு செய்யவேண்டும். பதிவு கட்டணம் கிடையாது. இந்த தகவலை மாவட்ட அறிவியல் மைய அதிகாரி தெரிவித்து உள்ளார்.

**<u>விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று சாஸ்தா கோவில் அணை திறப்பு</u>**



சாஸ்தா கோவில் அணையை கோபால்சாமி எம்.எல்.ஏ. திறந்து வைத்த போது எடுத்தபடம்.

ராஜபாளையம், விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று சாஸ்தா கோவில் அணை நேற்று திறக்கப்பட்டது. சாஸ்தா கோவில் ராஜபாளையம் அருகே தேவதானத்தில் சாஸ்தாகோவில் அணை உள்ளது. கடந்த மாதம் பெய்த தொடர் மழையால் இந்த அணைக்கு தண்ணீர் வரத்து அதிகரித்து நிரம்பியது. இதைத்தொடர்ந்து இந்த பகுதி விவசாயிகள் விவசாய பணிக்காக சாஸ்தா கோவில் அணையை திறந்து விட வேண்டும் என்று மாவட்ட நிர்வாகத்துக்கு கோரிக்கை வைத்தனர். அதன் பேரில் விவசாயப் பணிக்காக அணை திறப்பு நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட கோபால்சாமி எம்.எல்.ஏ மதகை திறந்து வைத்தார்.

பாசனவசதி

இந்த அணை திறக்கப்பட்டதால் 18 கிராமங்களில் உள்ள விவசாய நிலங்கள் பயன் பெறும். விநாடிக்கு 50 கன அடி வீதம் 8 நாட்களுக்கு தண்ணீர் திறந்து விட பொதுப்பணித்துறை அதிகாரிகள் ஏற்பாடு செய்துள்ளனர். இதே போல் அணை நீர் இருப்பினைக் கருத்தில் கொண்டு மொத்தம் 48 நாட்களுக்கு வழங்கப்படும். இதன் மூலம் 11 கண்மாய்கள் மூலம் 2679.10 ஏக்கர் மற்றும் நேரடி பாசனம் மூலம் 451.58 ஏக்கர் ஆக மொத்தம் 3130.68 ஏக்கர் நஞ்சை நிலங்கள் பாசன வசதி உறுதி செய்யப்பட வாய்ப்பு உள்ளது. விவசாயி கள்

அனைவரும் அதிக மகசூலை பெறும் நோக்கத்துடன் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் என பொதுப்பணித்துறை அதிகாரிகள் வேண்டு கோள் வைத்துள்ளனர். எதிர்பாராதவாறு பருவ மழை பொய்த்து நீர்தேக்கத்திற்கு நீர்வரத்து குறையும் போது விவசாயத்திற்கு தேவையான தண்ணீர் வழங்க இயலாது என்றும் பொதுப்பணித்துறை அறிவித்துள்ளது. கலந்து கொண்டவர்கள் அணை திறப்பு நிகழ்ச்சியில் உதவி செயற்பொறியாளர் நாராயணசாமி, உதவிப்பொறியாளர்கள் லட்சுமணன், ஜான்சிஅனிதா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.